
www.tamilarangam.net

நட்புறவுப்
மார்ச்
1989

# மௌனம்

விலை ரூபாய் இரண்டு

இலக்கிய இதழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



□

# 2

## இம்ப்பிரசனிசம்

### *மரபுக்கலையின் இறுதிக் கட்டம்*

□

புதிய போக்குகளின் வருகையைப் பற்றிய சூசக முதல் அறிவிப்பு இம்ப்பிரசனிச பாணிக் காரர்களிடமிருந்து வந்தது. விரிநுணுக்க கூறுகளில்லாமலே பொதுமைப்பாவமும் தொனியும் உண்டுபண்ணும் ஓவியப் பண்பு இவர்களது படைப்புகளில் இருந்தது. இப் பாணி ஓவியங்களில், தீட்டப்படுகின்ற பொருளின் வடிவமைப்பு அப்படியே இருக்கும் வண்ணம் விரிவாகவும் நுணுக்கமாகவும் சித்தரிக்கப்படவில்லை. மாறாக வடிவம் கரைந்துவிட்ட, ஆனாலும் அடையாளம் காணக்கூடிய விதத்தில் வரையப்பட்டது. ஏன்? ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்திற்குப்பின் ஒரு கலாமரபு உருவாகியது. அந்த மரபுப் படி கலைஞனின் நோக்கம் என்னவென்றால், தன் சுய விருப்பு வெறுப்புகளை நீக்கிவிட்டுப் பார்க்கும் விஞ்ஞானியைப்போல், அவன் புலனுக்குப்படும் உலகத்தை அப்படியே தத்ரூபமாக வரையவேண்டும். அதுதான் பகராண்மை (Representation) அல்லது புறவயக்கலை எனப்படுகிறது. இந்த மரபில் சலிப்பு ஏற்பட்டதன் விளைவாக தோன்றியதல்ல இம்பிரசனிசம். அது இதே வகையில் இன்னொரு வித பாணி அவ்வளவுதான். கலையைப் பற்றியும் வாழ்க்கைப் பற்றியும் கொண்ட ஒரு புது உளப்பாங்கு, இந்த புது உளப்பாங்குதான் நவீனபாணி ஓவியத்தின் தொடக்க காலத் தலையூற்றாக இருந்தது.

இயற்கையில் விரைந்து நிகழும் மாறுதல்களையும், கணநேர சாசுவதங்களையும் தம் ஓவியங்களில் நிலையாக்குவதே இம்ப்ரசனிச ஓவியர்களின் அக்கறையாக இருந்தது. முன்பே குறிப்பிட்டதுபோல் உட்பொருள் என்பது இடையறாத மாற்றங்களுக்கு வளர்ச்சிக்கு உள்ளாகிறது என்பதைக் கலைஞர்கள் கண்டனர்.

இம்ப்பிரசனிசம் பிரான்ஸில் தொடங்கியது. பிரான்ஸில் கலையையும், அதனுடன் சம்பந்தப்பட்ட எதையும் தீர்மானித்தது அரசாங்க நிறுவனமான பிரெஞ்ச் அகாதமி. இந்த அகாதமிதான் அழகுள்ளவை, கலாபூர்வமானவை எவை எவை என்று எப்படித் தீர்மானிப்பது என்பதற்கான கடுமையான விதிகளை வகுத்திருந்தது. இது கிளாசிகல் கலையைத் தான் கலை என்று ஏற்றுக்கொண்டது. கிளாசிகல் கலை என்பது பண்டைய கிரேக்க, ரோமர்கள் பண்பாட்டில் பிறந்து வளர்ந்தது. அதன்படி இயற்கை, மாறுதல்களுக்கு உட்படாத, அப்பாற்பட்ட, அழியாத அழகு ஒன்றிருக்கிறது. அதைத்தான் ஓவியமாகத் தீட்டவேண்டும். இந்தக் கலைக் கோட்பாடுதான் அங்கே அரசோச்சிக் கொண்டிருந்தது. மாறுதலை நோக்கியிருக்கும் கோட்பாட்டை அடிப்படையாக ஏற்றுக்கொண்டதால் இம்ப்பிரசனிச ஓவியர்கள் அகாதமியைப் பகைத்துக் கொண்டனர். பகைத்துக் கொள்ளுதல் என்பது பயங்கர விளைவுகளை எதிர்கொள்வதற்கு ஒப்பாகும். அகாதமியுடன் மாறுபட்டதால் இம்ப்பிரசனிச ஓவியர்கள் ஒதுக்கப்பட்டனர்.

இம்ப்பிரசனிச ஓவியர்களுக்கு முன்பிருந்தவர்கள், தங்கள் அறையைவிட்டு வெளியே செல்லவில்லை. முதன்முதலாக இவர்கள்தான் அறையின் நான்கு சுவர்களைவிட்டு திறந்த வெளிக்கு கான்வாஸையும், தூரிகைகளையும் எடுத்துச் சென்றனர். இயற்கையை அதன் இருப்பிடத்திலேயே வைத்து வரையத் தொடங்கினார்கள். நிலக் காட்சியில் நிகழும் இயக்கமும், நெகிழும் திரவத் தன்மையும் அவர்களிடம் பிரக்ஞைகொண்டன. ஒளியின் உண்மை நீரின் மின்னிடும் மேற்பரப்பு கணத்திற்கு கணம், பருவத்திற்கு பருவம் மாறும் காட்சிகளின் நுண்மைகளை சாசுவதப்படுத்தினர்.

இம்ப்பிரசனிச ஓவியர்களின் சிறப்புப் பண்புகள், தனித்தன்மைகள் அவர்கள் கையாண்ட உத்திகளினால் வந்தவை. வண்ணத்தொனிகளைப் பிரித்தல், வண்ணக் குழம்பை திட்டுத்திட்டாகத் தீட்டுதல், நெகிழ்வாகக் கையாளுதல், புதுமையான துடிப்பான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வண்ண உறவுகளை நிர்மாணித்தல் போன்ற கூறுகள் அப்போது தோன்றின.

இப்பாணியின் சிறப்புப் பண்புகள்: புறப் பொருளின் வடிவத்தை மறந்துவிட்டு அதன் ஒளியையும், சூழலையும் கொண்டு வருவதே கலைஞனின் நோக்கமாயிருந்தது. இதன் விளைவாக, நமக்குப் பரிச்சயமான உலகத்தின் திட அமைப்புகளும், மற்ற விவரங்களும் தூரிகை வண்ணம் சிருஷ்டித்த கனவு உலகில் மறைந்து போயின. வடிவங்களை வண்ணங்கள் விழுங்கிவிட்டன. மிஞ்சியது வண்ணங்களால் ஆன கனவுதான். கலைஞனின் பார்வை உருவாக்கும் யதார்த்தமே முழுவதுமாகக் கொண்டுவரப்பட்டதால் புறஉலகின் யதார்த்தம் பின்னொதுங்கி விட்டது. இந்த வகை ஓவியங் களில் பல புதிதாக உருவாகிவரும் எந்திர வியல் பொருளாதார சமூகத்தின் புறக் கூறு களைச் சித்தரித்தன.

## இம்பிரசனிசத்தின் தலையூற்றுகள்

எந்த ஒரு பாணியும் அதற்கு முன்பு இருந்ததை முற்றிலும் தூக்கி எறிந்துவிட்டு, இதுவரை இல்லாத ஒன்றை உருவாக்க வில்லை. ஒருவித பரிணாம வளர்ச்சிதான். ஒவ்வொரு பாணிக்கும் தலையூற்றுகள் உண்டு. பிறவற்றின் பாதிப்புகள் உண்டு. இம்ப்ரசனி சத்தைப் பாதித்தவை.

1. ஆங்கில நிலக் காட்சி ஓவியங்கள்.
2. 19ம் நூற்றாண்டின் முப்பதுகளில் தொடங்கிய ரொமாண்டிக் இயக்கம்.
3. புறவாய்மையியல்
4. போட்டோகிராபி
5. பார்பிசோ கலைப் பள்ளி
6. அகாமி மறுத்த ஓவியங்களின் கலைக் கூடம்
7. பாரீஸ் கஃபே சொசைட்டி

## ஆங்கில நிலக் காட்சி ஓவியங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில ஓவியர்கள் பலர் நிலக் காட்சிகளைத் தீட்டு வதில் பெரிதும் ஆர்வம் கொண்டனர். ஆனால் அவர்கள் இயற்கையை அப்படியே வரைந்து விடவில்லை. தாங்கள் உருவாக்க விரும்பும் அழகிற்கு ஏற்ப கூட்டியோ குறைத்தோ வரைந் தனர். இந்த மரபின் இறுதியாக வந்தவர் கான்ஸ்டேபிள் (1776-1837) இயற்கை அவர் புலன்களில் ஏற்படுத்திய பாதிப்புகளின் சான்று களாக உள்ளவை அவரது ஓவியங்கள். அந்த மனப் பதிவுகள் எவ்வித திருத்தமுமின்றி தோன்றிய வண்ணமே வரையப்பட்டன. குறிப்பிட்ட விஷயத்தைத்தான் ஓவியத்தில் தீட்ட வேண்டும் என்ற சட்டமோ விருப்பு வெறுப்போ தனக்கு இல்லை என்றார். ‘கண்ணில்படும் ஏந்த இடமும் ஓவியமாகத் தீட்ட உகந்ததே; எதுவும் எனக்கு அசிங்க மாகத் தோன்றவில்லை’ என்றார்.

அவர் காலத்திய ஐரோப்பிய கலா மரபு இவ்விதமாக இருந்தது: இயற்கையின் பல்வேறு பட்ட தன்மைகளையோ, பகுதிகளையோ பிரதிபலிப்பதல்ல கலை. அதற்கு மாறாக நிறைவான லட்சிய இயற்கையைத் தீட்டுவதே கலை. அன்றைய ஐரோப்பிய பிரபுக்களின் மாளிகைத் தோட்டங்கள் இயற்கையாக இல் லாது செயற்கையாக, தோட்டக் கலை நிபுணனின் கை வண்ணமாக கத்தரித்து அழகு படுத்தப்பட்டன. நோக்கம்: ஒரு லட்சிய இயற்கை அழகைப் பிரதிபலிப்பது. ‘‘கலை யானது இயற்கையைப்போல் இருக்கக்கூடாது. இயற்கை கலையைப்போல் இருக்கவேண்டும்.’’

இந்தக் கருத்துக்களுக்கு நேர்முரணான விதத்தில் கான்ஸ்டேபிளின் கருத்துக்கள் இருந்தன. இதைத்தான் ஓவியம் சித்தரிக்க வேண்டும் என்ற லட்சியப் பொருள் எதுவும் இல்லை. ஒவ்வொரு கணத்திற்கும் தனித் தன்மை உண்டு. பொருட்களுக்கிடையே ஒத் திசைவு இல்லை. எந்த இரண்டு நாட்களும் ஒரே அனுபவத்தைத் தரவில்லை. ஏன் இரண்டு மணி நேரங்கள்கூட ஒரே மரத்தின் இலைகளிலேகூட எத்தனை வேறுபாடு?

□ தொடரும்

பாலம்

ஜனவரி, பிப்ரவரி, மார்ச் 1989
□
தனியிதழ் ரூ. இரண்டு
ஆண்டுச் சந்தா: ரூ. இருபத்தைந்து
□
பாலம், 12, முதல் பிரதான சாலை,
நேரு நகர், அடையாறு, சென்னை - 20.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனிமேல் தான் ஈழத் தமிழர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்

## ஈழப் புரட்சி அமைப்பின் சங்கர் பேட்டி

? ஆயுதப் போராட்டமும் ஜனநாயக வழிக்கு திரும்புதலும் ஆகிய இரு வழிகளும் தமிழ் மக்கள் எடுத்த இயல்பான முடிவுகள் என்று எண்ணுகிறீர்களா ?

* உங்கள் கேள்விக்குச் சுருக்கமாகப் பதில் சொல்வதாக இருந்தால் இல்லை என்றே சொல்லவேண்டும். ஏன் எனில் 1983ம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட மாற்றமானது மக்களடிப்படையில் ஏற்பட்ட இயல்பான முடிவல்ல. அதேபோல ஒப்பந்தத்தை ஒட்டிய ஜனநாயக வழிக்குத் திரும்புதலும் அவர்களின் இயல்பான முடிவல்ல.

? தேர்தலின் போது மக்களிடம் எப்படிச் சென்றீர்கள் ? எவ்விதப் பிரச்சார முறைகளைக் கையாண்டீர்கள் ?

* பல இடையூறுகள், தடைகள் மத்தியிலும் மிகக் குறைந்த அவகாசத்திலும் தேர்தலின் போது நாம் மக்களை வீடு வீடாகச்சென்று அணுகி எமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியதன் மூலம், மக்களை ஒரு சக்தி வாய்ந்த பிரச்சார ஊடகமாக மாற்றியதன் மூலம் எமது பிரச்சாரத்தை மேற் கொண்டோம். அதே போலத் தான் ஆடம்பர மான பிரச்சார விளம்பரங்களையோ, பகட்டாரவாரமான அரசியல் பிரகடனங் களையோ செய்யவில்லை. மாறாக நாம் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் குறித்து நன்கு சிந்தித்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஒரு திட்டவட்டமான வழிமுறைகளை எமது தேர்தல் பிரகடனமாக துண்டுப் பிரசுரம் மூலம் தெரியப் படுத்தியிருந்தோம்.

? அமைதிக்குப் பின்தான் தேர்தல் என்று கூறிய ஈரோஸ் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இதைப் பொருத்திப் பார்க்காதது ஏன் ?

* மாகாண சபைத் தேர்தலின் போது இருந்த அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் (கடலடங்குச் சட்டம்) பொருளாதாரத்தை (விவசாயம், கடற்றொழில் மற்றும் ஏனைய தொழில்கள்) அபிவிருத்தி செய்ய முடியாத சூழ்நிலையில் ஈரோஸ் அமைதிக்குப் பின்தான் தேர்தல் எனக் கூறிய போது, நடைபெற்ற தேர்தலானது மக்களது எண்ண அபிலாசைகளை பிரதிபலிக்காமல், புறக்கணித்து ஒருதலைப் பட்சமாகவும், பலவந்தமாக செயற்கையான முறையில் மேற்கொள்ளப்பட்டதால் தான் ஈரோஸ் மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்தது மட்டுமின்றி, தமிழ்மக்களின் அடுத்த ஆரம்பம் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதும் எனச்சுட்டிக்காட்டி இருந்தது. எனவே இத்தேர்தலின் போது சூழ்நிலைகளில் ஏற்பட்ட சில மாற்றங்களை வளர்த்தெடுப்பதற்கும், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும் தான் ஈரோஸ் இத் தேர்தலை எதிர் கொண்டது.

? தேர்தலுக்குப் பின் மாநில அரசு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள் ?

* ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபைக்குள்ள அதிகாரங்களை முழுமையாகப் பெறுவதற்கு மாநில அரசு உரிய நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ள வேண்டும். அடுத்து, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை முழு அளவில் சென்றடைவதற்கு கட்சி சார்பற்ற முறையில் பொதுவான வழிமுறைகளின் மூலம் சென்றடைவதற்கு வழி செய்தல் அவசியம்.

? தேர்தல் முடிவுகளுக்குப் பின் ஈபிஆர்எல்எப் அரசும் கட்சியினரும் மக்களிடம் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் ?

* தேர்தல் முடிவுகள் அறிவித்த பின்னர், தேர்தல் முடிவுகள் மூலம் தம்மையும்

□ □ □

**இலங்கையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின் ஈழத்தின் நிலைமைகள் பற்றியும் ஈழப் போராட்டம் பற்றியும் இப்பேட்டியில் சங்கர் விளக்குகிறார்**

www.tamilarangam.net

(EPRLF) அவர்களது கையாலாக வெற்றுத் தன்மையையும் மக்கள் ஈரோசுக்கு பெரும் பான்மை ஆதரவளித்ததன் மூலம் வெளிப் படுத்தியதால், ஆத்திரமடைந்து தமிழ் மக்களை கண்மூடித்தனமாக ஆயுதம் கொண்டு தாக்கியது மட்டுமின்றி, EROS தோழர்களையும், ஆதரவாளர்களையும், ஆதரவாக இருந்த பொது மக்களையும் கொலை செய்தும், தாக்கிக் காயப்படுத்தியு முள்ளனர்.

? தேர்தல் முடிவு மூலம் ஈழப் போராட்டத்தில் நேர்ந்துள்ள 'கட்டத்தை' எவ்வாறு கணிக் கிறீர்கள் ?

* தமிழ் மக்களின் அரசியல் என்ற பொது வாழ்க்கையில் தோன்றிய பாரிய அரசியல் வெற்றிடத்தை நடந்து முடிந்த பாராளு மன்றத் தேர்தல் மூலம் நிவர்த்தி செய்வதற் கான ஆரம்ப வாய்ப்பினைப் பெற்று அரசியல் வெற்றிடத்தை இல்லாமல் செய் வதற்கு வழியமைத்துள்ளது இந்தக் கால கட்டம்.

? ஈழப் போராட்டத்தின் அடுத்த படி என்ன ? எப்படிக் கையாளப் போகிறீர்கள் ?

* ஈழப் போராட்டத்தின் அடுத்த படியாக நாம் மேற்கொள்ளுவது, ஈழப் போராட்டத் திற்காக நாம் முன்வைத்த கோரிக்கைகள் (தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனை கள்) இன்னமும் தீர்க்கப்படாத நிலையிலேயே உள்ளது. இதனைத் தீர்ப்பதற்கான ஆரம்ப வழிமுறையாக தமிழர் அமைப்புகளிடையேயும், தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையே ஒரு ஒற்றுமையைக் கொண்டு வந்து ஒற்றுமையான ஒருமித்த கருத்தை முன் வைப்பதன் மூலம் படிப்படியாக வென் றெடுப்பதாகும்.

? **நீங்கள் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் வைக்கும் கோரிக்கை என்ன ?**

* இலங்கை— இந்திய, அரசுகளுக்கு எம் மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் விபரம், இரு அரசுகளுக்கும் நாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (கடித விபரம் 6-ஆம் பக்கம்)

? தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நீங்கள் விடுக்கும் வேண்டுகோள் என்ன ?

* மக்களின் அபிலாசைகளை ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் வென்றெடுக்க முடியும் என்ற அவர்களது நிலையில் இருந்து, ஏனைய வழிமுறைகளைக் கையாளும் சக்திகளுக்கும் அதில் பங்குண்டு என்பதை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

? இனியும் ஈழ மக்கள் எவ்வகையான ஒத் துழைப்பைத் தர வேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள் ?

* ஈழவர்கள் இனிமேல்தான் விழிப்பாகவும், நிதானத்துடனும் செயல்பட வேண்டும். ஏன் எனில் கடந்த காலங்களில் அவர் களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு தமக்கும், தமது எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி ஒரு சரியான வழிகாட்டலையும், வழி நடத்தலையும் உள்ளவர்களாகத் தம்மைத் தயார்படுத்தி தம்மை நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம், திசைமாறிய சக்திகள், இலக்குகள் மாறிய வழிகாட்டல் என்பவற்றுக்கு இடமளிக்கா மல் எதிர் காலத்தில் ஒரு நல்ல சந்ததியை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை யைத்தான் அவர்களிடம் இருந்து எதிர் பார்க்கிறோம். □


## 'பொன்னி'யின் புதிய நூல்கள்

□

*சிட்டகாங் வீரர்கள்*

**விலை ரூ : 18-00**

*அபுஜிகாத் சில நினைவுகள்*

**விலை ரூ : 2-50**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அதிக இடங்களை ஈழப் புரட்சியமைப்பு கைப்பற்றியுள்ளது. பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின் ஈழப் புரட்சி அமைப்பு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி பிரமேதாசா, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஆகியோருக்கு எழுதிய கடிதத்தை அப்படியே வெளியிடுகிறோம்.

## தேர்தல் மூலம் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் விடுக்கும் வேண்டுகோள்

பிப் - 15 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மூலம் தமிழ்பேசும் மக்கள் அதிர்ச்சி வைத்தியம் செய்துள்ளார்கள்.

மாகாண சபை உருவானபோது ஏற்பட்ட புதிய சூழ்நிலையால் மக்கள் பாதிக்கப் பட்டிருந்த வேளையில், அவர்களது மன எண்ணங்களை பிரதிபலிப்பதற்காக நாம் பாராளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்துவ தென்ற அடிப்படையிலேயே வேட்பாளர்களை நிறுத்தியிருந்தோம். வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோண மலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் நாம் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தோம். அம் பாறை மாவட்டத்தில் அங்கு வாழும் பெரும் பான்மை முஸ்லீம்களின் தனித்துவத்திற்குப் போட்டி போடக் கூடாது என்ற காரணத்தால் போட்டி தவிர்ப்பு செய்திருந்தோம். எம்மால் நன்கு வேரூன்றப்பட்டிருந்த மலையகத்தில், அங்குள்ள தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற் கொண்டு போட்டிக்கு நாம் முன்வர வில்லை.

நாம் முன் வைத்த தேர்தல் அறிக்கைக்கு நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவானது உறுதியான பெரும்பான்மைப் பலமொன்றை எமக்கு அளித்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் எமது கருத்துக்களிடம் ஒன்றிப் போயுள்ளதை வெளிப்படுத்தியுள்ளனர்.

**தேர்தல் முடிவின் மூலம்**

1. எமது மக்கள் சலுகைக்குப் பதிலாக அமைதியான அரசியல் தீர்வொன்றை விரை வாகக் காண வேண்டுமென்றே வேண்டுகோள் விடுக்கின்றனர்.

2. மாகாண சபையின் மூலம் அதிகாரத் துக்கு வந்தவர்களும், அவர்களுக்குக் கீழ் இயங்கும் ஆயுதந்தாங்கிய குழுக்களும் தம்மை அச்சுறுத்துவதாகவும், தாம் இப்போக்கை வெறுப்பதாகவும் எடுத்துச் சொல்லியுள்ளனர்.

3. இலங்கை இனப்பிரச்சினை மீதான இந்தியாவின் அணுகுமுறையில் அதிருப்தி அடைந்துள்ள தமிழ்பேசும் மக்கள் தீவிரமான மாற்றம் ஒன்றைக் கோரி நிற்கின்றனர். தமது உள்விவகாரங்களில் தலையிடாத நண்ப னாகவே இந்தியா தம்முடன் உறவு கொண் டிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ள்ளார்கள்.

தேர்தல் முடிவுகளை ஒட்டி வெளிப் பட்டுள்ள புதிய கருத்துக்களை ஏற்று அமைதி யான ஒரு நிலைமையை உருவாக்க வழி வகுக்குமாறும், ஆதரவு நல்குமாறும், நாம் கேட்டுக் கொள்கிறோம். மேற்படியான தமிழ் பேசும் மக்களால் எமக்குப் பணிக்கப்பட்ட ஆணைகள் தொடர்பாக தங்களுடன் நேரில் சந்தித்து உரையாட விருப்பம் கொண் டுள்ளோம்.

நன்றி.

இவ்வண்ணம்,
**வே பாலகுமாரன்,**
பொதுச்செயலாளர்.

**பின் இணைப்பு:**

தேர்தல் அறிக்கை:- ஈழவர் ஜனநாயக முன்னணியானது தான் பற்றி நிற்கும் கொள்கைத் தீர்மானங்களையும், அதனது உடனடி அமைதிக்கான யோசனை களையும் இங்கு தருகின்றது.

**கொள்கைத் தீர்மானங்கள்:** தமிழ்பேசும் மக்கள் மத்தியில் போராட்ட சக்தியாய் தம்மை இனம் காட்டியவர்களிடையே திம்பு மாநாட்டில் எய்தப்பட்ட நான்கு அம்ச இணக்கத்தை அடி யொற்றி இக்கொள்கைகள் இங்கு முன் மொழியப் படுகின்றன.

1. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்.
2. வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதி களில் செறிவாக வாழும் தமிழ்பேசும் மக்கள் தமக்கான பாரம்பரிய பிரதேசத்தையுடையவர்கள்.

www.tamilarangam.net

3. 1948 பிப் - 4ல் இலங்கை பிரித்தானியரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட போது இலங்கைப் பிரஜைகளாக கணிக்கப்பட்டவர்களும் அவர்களது இயற்கை அதிகரிப்புமே தமிழ்பேசும் பிரஜைகள் தீர்மானிக்கும் கால நியமமாகும்.

4. வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் செறிவாக வாழும் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள்.

5. தமிழ் பேசும் மக்கள் பிரச்சனைகளுக்கான இடைக்காலத் தீர்வாக தேசிய அமைப்பு முறை ஒன்றை இலங்கையில் நிறுவிக் கொள்ள உரிமை உடையவர்கள்.

**அமைதிக்கான யோசனைகள்:**

தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்து அமைதி உருவாவதற்கு ஏதுவாகப் பின்வரும் விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென ஈழவர் ஜனநாயக முன்னணியானது தனது யோசனைகளை முன்மொழிகிறது.

1. நிரந்தர யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்படுவதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, அரசியல் கைதிகளும், நிபந்தனையின்றி விடுவிக்க வகை செய்தல்.

2. விடுதலை அமைப்புகளிடையே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தி இணக்க நிலைக்கு வழியமைத்தல்.

3. தமிழ் பேசும் மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய வழிவகையை அங்கீகரிக்க வகை செய்தல்.

4. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டுள்ள இலங்கை இந்திய இராணுவத் துறையினர் படைகுறைப்பு, வெளியேற்றம் குறித்து கால எல்லையை நிர்ணயித்தல்.

5. தமிழ் பேசும் மக்களின் தேசிய அந்தஸ்தை நிலைநிறுத்தும் வகையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை திருத்த வகை செய்தல்.

மேற்குறிப்பிட்ட கொள்கை முடிவுகளையும், அமைதிக்கான யோசனைகளையும் ஒருமித்த நிலைக்கு இட்டு வரும்வகையில் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த அனைத்து சக்திகளும் உள்ளடக்கிய ஒரு தேசிய மாநாட்டின் மூலம் பொதுநிலை எய்த ஈழவர் ஜனநாயக முன்னணியானது தீர்மானித்துள்ளது. □

## 15.02.1989இல் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

**1. யாழ் மாவட்டம் :** தெரிவு செய்யப்பட்டோர் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள்.
ஈரோஸ் = 8, ஈபிஆர்எல்எப் = 3
**ஈரோஸ் உறுப்பினர்கள் :**
இளையதம்பி இரத்தினசபாபதி, இளையதம்பி பரராஜசிங்கம், சின்னத்தம்பி சிவமகாராஜா, பொன்னையா செல்லையா, தம்பு லோகநாத பிள்ளை, செபஸ்டியாம் பிள்ளை எட்வேட், கணபதி செல்வநாயகம், ஜோசெப் ஜாச் ராஜேந்திரம்.
**ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் :**
கந்தையா நவரத்தினம், கந்தையா பிறேமசந்திரன், கணேச சங்கரி யோகசங்கரி

**2. வன்னிமாவட்டம் :** தெரிவு செய்யப்பட்டோர் 5 பாராளுமன்ற உறுப்பினர்கள்.
ஈபிஆர்எல்எப் = 2, ஈரோஸ் = 1,
ஐ.தே.க = 1, சி.ல.மு.காங் = 1
**ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் :**
அந்தோனி இமானுவல் சில்வா
ராஜ் புவனேஸ்வரன்
**ஈரோஸ் உறுப்பினர் :**
சின்னாச்சி முத்து அல்பிரட்

**3. திருகோணமலை :** தெரிவு செய்யப்பட்டோர் 4 பாராளுமன்ற உறுப்பினர்கள்.
ஈரோஸ் = 2, ஐ.தே.க. = 1, சி.ல.சு.க = 1
**ஈரோஸ் உறுப்பினர்கள் :**
சிவப்பிரகாசம் ரட்ணராஜா
கோணமலை மாதவராஜா
**ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் :**
M.H.W. முகமத்
**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் :**
H.K.A.D.S குணவர்த்தன

**4. மட்டக்களப்பு :** தெரிவு செய்யப்பட்டோர் 5 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈபிஆர்எல்எப் = 3 சி.ல.மு.காங் = 1 ஈரோஸ் = 1
**ஈ. பி. ஆர். எல். எப். உறுப்பினர்கள் :**
கோ. கருணாகரன், பிரின்ஸ் காசிநாதன்,
சாம் தம்பிமுத்து
**ஈரோஸ் உறுப்பினர் :** அழகுப்பொடி குணசீலன்
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் :**
ஏ. என். கரியதுல்லா

**5. அம்பாறை மாவட்டம் :** தெரிவு செய்யப்பட்டோர் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள்
ஐக்கிய தேசியக் கட்சி = 3 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி = 1 டெலோ = 1 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் = 1



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பச்சைக் குழந்தையடி

## ரோகாந்த்

□ □ □

படி உயரமாய்ப் போனது. சட்டென குறுக்கு ஒடிந்து சதுர மாய் இளைப்பாறிக் கொண்டது. மீண்டும் உயர்ந்து போனது, போய்நீளமாய் கிடந்த வராண்டா நடுவில் சங்கமித்தது.

சங்கமித்த இடத்தில் படி உதறி வராண் டாவில் பிரவேசித்தான். படி ஏறிவந்த வேகத் திலேயேஇயல்பாய் வராண்டாவின் இடப்பக்கம் திரும்பி ஓட்டம் கலந்து நடந்தான். மூச்சு வாங்கியது. பிடரி பக்கம் ஈரமாய் நசநசத்தது. கைகளில் மாத்திரை மருந்துகவர், கண்களில் ஆழமான ஒரு தேடல்.

''சரசு...''

உள்ளுக்குள் என்னவோ சதா அவள் பெயரே ஓலமிட்டுக் கொண்டிருந்தது. வராண் டாவில் போகிறவர்கள் திரும்பிப் பார்க்கும்படி 'சரசு' என்றான். அவளுடைய கலவரப்பட்ட முகம் முன்னால் வந்து அடி வயிற்றைக் கலக் கியது.

வேகம் குறைத்தான். கால்கள் அறையின் வாசலை தொட்ட போது சரசு பெரிதாய்க் குரலெடுத்து அலறினாள். இவன் காது களுக்குள் நெருப்பு ஜுவாலை திணித்தாள்.

''என்னடா...இதோ வந்துட்டேம்பாரு...''

ஓடிப்போய் இரண்டு கைகளையும் விரித்து ட்ரேயில் கவரைப் போட்டு விட்டு அவள் கை களைத் தாங்கிக் கொண்டான்.

''எனக்கு பயமாயிருக்கு...'' வாய் குழறி னாள். கண்களை இறுகமூடி இவன் கை களுக்குள் முயலாய்ப் பதுங்கிக் கொண்டாள்.

இவன் உதடு கடித்து முகம் திரும்பி பக்கத்தில் நின்ற வெள்ளையுடை தாதியை பார்த்தான்.

''ஒரு இன்ஞ்செக்ஷன் போடணும் சார், பக்கத் திலேயே நெருங்கவிட மாட்டேங்கறாங்க ...அந்த ஸிஸ்டர் கை யை வேற கடிச்சுட் டாங்க...'' சிரிஞ் ஏந் திய வெள்ளையுடை தாதி முறையிட்டாள்.

''ஸாரி...ஸாரி...''

தடுமாறினான். நகக்கணுவிலும் அவமானம் குடி புகுந்து குத்தியது. விழிகள் சரசை எரிச்ச லோடு பார்த்தது. தாதி பக்கம் திரும்புகையில் நீர் முட்ட இறைஞ்சியது.

புரிந்து கொண்ட தாதி உதடு நெளித் தாள். ''இட்ஸ் ஆல் ரைட்'' என்று முணு முணுத்துக் கொண்டாள். சிரிஞ் எடுத்து உயர்த்திப் பிடித்தாள்.

''வேணாம்...''

''சரசு என்ன இது குழந்தை மாதிரி... வீணாக் கத்தாத...''

''முடியாது...''

இவன் நெருங்கிய போது பிடித்துத் தள்ளி விட்டாள்.

''வம்பா ஒத வாங்காத...'' இவன் குரலில் வில்லின் நாண் அதிர்வு இருந்தது. அம்பு சரசுவை மௌனியாக்கி விசும்பலெடுக்க வைத்தது.

இடுப்புச் சேலை விலக்கி, நர்ஸ் ஊசி முனை பொருத்தினாள். கத்த எத்தனித்த சரசுவை மார்போடு இறுக்கிக் கொண்டான். அவளது மொத்த பாரத்தையும் தன் மார்பில் வாங்கினான்.

கல்யாணமாகி சரியாய் ஏழாவது மாதம் முதல் முறையாய் சரசு உண்டானாள்.

''கங்கராஜுலேஷன்ஸ்......எங்க வீட்ல சொன்னா...பத்திரமா பாத்துக்கோ...'' கடைத் தெருவில் எதிர் வீட்டு வழுக்கை மனிதர் வந்து கை கொடுத்தார். புரியாமல் நின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“நேத்து உனக்கு நைட்ஷிப்டா...எட்டு மணி இருக்கும். உன் வீட்டுக்காரி ஒரே அழுகை...சத்தம் கேட்டு பங்கஜம் தான் போய் பாத்துட்டு வந்து சொன்னா...ஒண்ணுமில்ல நாலுமுறை வாந்தி எடுத்துருக்கா...என்னடி யம்மா இப்படி அழுதுகிட்டு இருக்கன்னு கேட்ட துக்கு பதிலே சொல்லலையாம். வாந்தி எடுத்த யான்னு கேட்டுருக்கா... நாலு தடவைன்னு செய்கை காமிச்சுட்டு பழயபடியும் அழுகை... அப்புறம் கேள்வி மேல கேள்வி கேட்டுட்டு இதாத்தா இருக்கும், அசடே புருஷன் வந்தா சொல்லுன்னு வந்துட்டா...என்ன இப்படி பேந்தப் பேந்த முழிக்கற...உன் வீட்டுக்காரி உன்கிட்ட ஒண்ணும் சொல்லலையா... ?

இத்தனை நடந்திருக்கிறது இது வாயையே தொறக்கலியே...

“என்னப்பா...”

“சொன்னா...”

சந்தோஷமாச் சொல்லேன்...உன வீட்டுக் காரி தான் அர்த்தமில்லாம பயந்தான்னா நீயும் இப்படி சுரத்தை இல்லாம இருக்கியே...”

“இல்ல சார் சந்தோஷம் ஒண்ணும் புரியல...”

ரோட்டில் மூன்றாம் மனிதர் சொல்லித் தான் சரசு உண்டாகியிருக்கும் விஷயம் இவ னுக்குத் தெரிய வந்தது. விஷயம் சொன்ன எதிர் வீட்டு மனிதரைக் கூட்டிப்போய் காப்பரீஸ் வாங்கிக் கொடுத்தான். கடைத்தெரு வந்த விஷயம் மறந்து வீட்டிற்கு ஓடினான்.

“என்னடா கண்ணா என்ட கூட சொல் லாம...”

“என்னது...”

மெதுவாய் அவள் வயிறு நீவினான். உச்சி முகர்ந்து இதழ் தேடினான்.

“ச்சீ...” எரிச்சலாய் எறிகினாள்.

“அந்த மாமி வந்து நமட்டுச் சிரிப்பு சிரிக்கிறா...எனக்கு மானமே போயிடிச்சு...” நரகல் மிதித்த பாவனையில் சொன்னாள். “என்னத்துக்கு இந்தக்கருகம்...”

இவன் எரிச்சல் அடைந்தான். என் ஜீன். என் இரத்தம். என் குழந்தை...சரியான இடத்தில் தளிர்க்க ஆரம்பித்திருக்கிறது. மண் ணோடு சண்டையிட்டு முட்டி மோதி முளை விட்டு இருக்கிறது. இனி வளரும்...சின்னதாய் இரண்டு இலை...அடுத்து ஒன்று என்று வளரும் கிளை விட்டு பெரிதாய் வளரும். வளர்ந்து நிற்க நிழல் தரும், காய் தரும், கனி தரும், இது சந்தோஷம். தள்ளி நிற்கிற தனக்கே இது இத்தனை சந்தோஷம் என்றால்...தன்னுள் ளேயே அடக்கிக் கொண்டிருப்பவளுக்கு என் குழந்தை என்று சந்தோஷம் பொங்காதோ...

“சரசு...” இவன் சத்தமாய் குரல் கொடுத்த போது அவள் கிச்சனுக்குள் புகுந்திருந்தாள். எழுந்து பின்னால் போய் நின்றான். அவள் கண்டு கொள்ள வில்லை. ரொம்ப மும்முரமாய் காரியம் செய்து கொண்டிருந்தாள்.

“இது சந்தோஷப் படற விஷயம் சரசு...” சுவரில் சாய்ந்து கொண்டு ரொம்ப அமைதி யாய்ச் சொன்னான். “ஒவ்வொருத்தர் இதுக் காக தவமிருக்கறாங்க...”

“எதுக்கு இந்தக் கருமம் [illegible]ண்ற துக்கா...?”

“ச்சீ...நீ என்ன ஜென்மம்...”

“எனக்கு இதெல்லாம் ஒண்ணும் வேணாம்.”

இவன் கை நீட்டினான். பிடி கொடுக்கா மல் நழுவினாள். நீட்டிய இவன் கைகளுக்குள் அவள் புடவை மட்டும் சிக்கிக் கொண்டது.

சரசு இரு கைகளாலும் மார்பை மூடிக் கொண்டு “ராமா...ராமா...” என்று கத்தினாள்.

இவன் மூர்க்கமடைந்தான். புடவையை விசிறி அவள் முகத்தில் எறிந்தான். கொத்தாய் அவள் பிடரி மயிர் பிடித்து வாயிலேயே அடித் தான். தன்னையுணர்ந்த போது தலையில் அடித்துக் கொண்டு வெளியேறினான்.

சரசு உதடு கிழிந்து வழிகிற ரத்தத்தோடு முகம் பொத்திக் கொண்டு அழுதாள். ‘ராமா... ராமா..’ என்று புலம்பினாள்.

“ராமா...ராமா...”

அம்மா சொல்லிக் கொடுத்தாள். முதல் முறையாய் கொல்லைப்புறத்தில் உட்கார வைத்த அன்று சொன்னாள். “ராமா... ராமான்னு சொல்லிகிட்டு பேசாம உக்காரு... என் பிராணனை வாங்காதே...”

சொல்லிவிட்டு அப்பாவிடம் ஓடினாள்.

அப்பா படுத்திருந்தார். ஒரு மாதமாய்ப் படுத்திருந்தார். சாதாரண ஜுரம் என்று நினைத்தது அப்பாவை விடாப்பிடியாய் பிடித் துக் கொண்டிருந்தது.

அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று வந்திருந்த உறவினர்கள் சிலர் சரசுவைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

அம்மா திடுமென அலறினாள். “ஐயோ என்ன விட்டுப் போயிட்டேளே...”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரசுவுக்கு ஒன்றும் புரியவில்லை.

சுற்றி நின்ற உறவினர்கள் அப்பாவை நோக்கி ஓடினார்கள்.

''அம்மா...'' என்று கத்திக்கொண்டு சரசு எழுந்தாள்.

''அடியே...நீ அங்கியே இருடி...'' கும்பலில் ஒரு பெண் இவளிடம் பேயாய்க் கத்திவிட்டு வீட்டிற்குள் ஓடினாள்.

சரசு அப்படியே நின்றாள். கண்ணில் நீர் பொங்கிப் பொங்கி வந்தது. தலையை நீட்டி எட்டி எட்டிப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. அது நீண்டு கிடக்கிற அக்ரஹாரத்து வீடு.

அம்மாவின் ஓலம் நன்றாய்க் கேட்டது.

சரசு இங்கிருந்தபடி அம்மா சொல்லிக் கொடுத்துவிட்டுப் போன ராமா...ராமா...வைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

யாரும் கொல்லைப்புறத்தில் இல்லை. கும்பலாய் அழுகிற சப்தம் மட்டும் கேட்டது.

நேரம் போகப் போக புதிதாய் நிறைய பேர்கள் வந்தார்கள். வந்தவர்கள் எல்லோரும் ஒருமுறை சரசுவை வந்து பார்த்துப் போனார்கள்.

''இது உக்காரதுக்கு நேரம் காலம் கெடக்கலியா...''

''அப்பன வாயில போட்டுட்டுன்னா உக்காந்துருக்கு...''

சரசு ஒவ்வொரு பேச்சுக்கும் ஒரு 'ராமா... ராமா...' சொல்லி கண்களை மூடிக்கொண்டாள்.

துணி மாற்ற வேண்டும். அம்மா வரமாட்டாள். அசௌகர்யமாய் இருந்தது. வேறு யாரையும் கூப்பிட்டுச் சொல்லவும் கூச்சமாய் இருந்தது. ரொம்ப சோர்வாய் இருந்தது. பசித்தது. அப்பா இறந்து போயிருக்கிறார். இப்பொழுது பசிக்கலாமா...?

அப்பாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. யாரிடம் சொல்வது?

ரொம்ப நேரம் கழித்து தம்பியும் தங்கையும் கொல்லைப்பக்கம் வந்தார்கள்.

''அப்பா உள்ள இருக்கற மூலையில, நீ இந்த மூலையில...'' தங்கை தனக்குத் தோன்றியதை சொல்லி வைத்தது.

''ஏய் அம்மு அப்படிச் சொல்லக்கூடாது... அப்பா சாமியாயிட்டார் இல்லக்கா...''

தம்பி பேசினான்.

''ஐயோ அங்க பாரு இந்த பசங்கள! கிட்ட நின்னுகிட்டு...'' என்றபடி சரசுவைச் சுற்றி நின்ற இருவரையும் யாரோ பிடித்து வீட்டிற்குள் தள்ளி விட்டார்கள்.

இரவு முழுக்க அழுதாள். பயமாயிருந்தது. வயிற்றுவலி வேறு. துணை என்ற பெயரில் கொஞ்சம் தள்ளி ஒரு கிழவி வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

அப்பா நடந்து வருகிற மாதிரி இருந்தது. நெருங்க நெருங்க பயமாய் இருந்தது. அப்பா தானே ஏன் பயப்படணும்...அப்பா செத்துப் போய்விட்டார்.

ராமா...ராமா...என்று முனக ஆரம்பித்தாள்.

அம்மாவிடம் போய் ஒட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

விடியலில் யாரோ ''இந்த கண்ராவியைப் பாரு...'' என்று கத்த சரசு விழித்தாள்.

ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. தன்னை சுற்றிலும் பார்த்துவிட்டு குன்றிப் போனாள். அவமானமாய் இருந்தது. இரண்டு பெண்கள் சுத்தம் செய்ய வசை பாடியபடி உதவினார்கள்.

சரசு வாய் திறக்கவில்லை.

உள்ளே அழுகிற ஓலம் கேட்டது. அப்பாவைப் பார்க்கணும்...அப்பாவைப் பார்க்கணும்... யாரிடமும் வாய் திறந்து சொல்லவில்லை. யார் வருகிறார்கள். என்ன செய்கிறார்கள்...எதுவும் அவளை பாதிக்கவில்லை.

அப்பாவைக் குளிப்பாட்டினார்கள்.

கண்களை மூடிக் கொண்டாள்.

புதுசாய் துணி சுற்றித் தூக்கினார்கள்.

''ராமா...ராமா'' என்றாள்.

அப்பா புறப்பட்டார்.

அம்மா அலறினாள்.

இவள் ராமா...ராமா...என்று உச்சத்துக்குப் போனாள்.

அதன் பிறகு வாழ்க்கை மாறி விட்டது. படிப்புக்குப் படிந்துபோக முடியவில்லை.

அம்மா படித்தது போதும் என்று விட்டாள். சமைத்துவிட்டு, நீண்ட வீட்டில் தனியாய் இருந்தாள். அம்மா ஸ்கூலுக்குப் போகும்போது வீடு பூட்டி சாவி எடுத்துப் போனாள். அம்மா ஸ்கூலில்தான் தம்பி தங்கை படிப்பு...மதியம் மூவரும் சேர்ந்து வருவார்கள். சாப்பாடு முடிந்து ஸ்கூலுக்குப் போகும்போது வீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூட்டப்படும். உள்ளே தனியாய் சரசு இங்கும் அங்கும் நடந்தாள்.

சும்மா உட்கார முடியவில்லை. படுத்தால் தூக்கம் வருவதில்லை. தூக்கம் வந்தால் கன வில் வருகிற உருவங்களுக்குப் பயந்தே தூங்க முடிவதில்லை. பயம்...பயம்...நின்றால் பயம். உட்கார்ந்தால் பயம். தன் நிழல் பார்த்து பயம். அடுப்பை ஊதும் பொழுது எழுகிற ஒலி கேட்டு பயம். இந்த அறையில் பயம் என்றால் அடுத்த அறை. அங்கும் பயம் என்றால் அடுத்தது. அடுத்தது, கொல்லைப்புறம் அடுத்தது கிணற் றடி...திடுமென கிணற்றை எட்டிப் பார்த்து பயந்துபோய் விர்ரென்று வாசலுக்கு ஓடுவாள்.

''அம்மா எனக்கு ரொம்ப பயமாய் இருக் கும்மா...''

''அதுக்குன்னு வீட்டைத் திறந்து போட் டுட்டுப் போகச் சொல்றியா...ஆளில்லாத வீடுன்னு எவனாவுது புகுந்து என்னமும் பண்ணிட்டா...''

''சும்மா உக்காந்துருக்க முடியலம்மா...''

''அதா உக்காந்தயே வீட்டையே நாசம் பண்ணிட்டு...''

''ராமா...ராமா...''

அம்மாவைத்தான் சரசுவுக்கு ரொம்ப பிடிக் கும். அம்மாவின் இந்த வார்த்தைக்குப் பிறகு அம்மாவிடம் இருந்தும் ஒதுங்கினாள். தன் பதினைந்தாவது வயதில் சுத்தமாய் அம்மாவை ஒதுக்கி விட்டாள்.

அது ஏன் நடந்திருக்க வேண்டும்? அதுவும் இவள் கண்களில் படும்படி...

அன்று சாப்பிட வரும்போது கூடவே ஒரு நபர்.

தம்பி தங்கை ஸ்கூலுக்குப் போன பின்பும் அந்த நபரும் அம்மாவும் இருந்தார்கள். சரசு தூங்கப் போனாள்.

வந்தவர் இரண்டாவது சாப்பாடு சாப்பிட் டதுதான் பிடிக்கவில்லை. அம்மா பரிமாறுவ தைப் பார்த்ததும் வியர்த்து ஊற்றியது. கை கால் எல்லாம் நடுங்கியது. பார்த்ததும கண் மூடிக் கொண்டாள். ராமா...ராமா...என்றபடி அப்படியே நின்றாள் அகலிகை கல்லான மாதிரி.

அதன் பிறகு சரசு அம்மாவிடம் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. அம்மா எத்தனை கெஞ்சியும் பேச முடியவில்லை. அம்மா கண்க ளைச் சந்திக்க முடியவில்லை. அம்மா பக்கத்தில் வந்ததும் கண்களை மூடிக் கொள்வாள். உள் ளுக்குள் ராமா...ராமா...என்று அனிச்சையாய் ஓடும்.

அப்புறம் எல்லார்க்கும் இவள் விசித்திர மாய்ப் பட்டாள். ஒதுங்கிப் போனார்கள். அம்மா மட்டும் எப்பொழுதும் இவள் பார்வைக் காய் ஏங்குகிற மாதிரித் திரிந்தாள். சாகும்வரை அப்படித்தான் திரிந்தாள்.

அம்மா இறந்த கொஞ்ச நாளில் தங்கை காதல் திருமணம் செய்துகொண்டு போனாள். அதுபற்றி அவளுக்கு எந்தவித அபிப்ராயமும் இருக்கவில்லை.

தம்பி சம்பாதித்துப் போட, சமைத்துப் போட்டாள். உயிர்வாழ மட்டுமே சாப்பிட்டாள் என்றபடி இருந்தாள்.

சரசுவின் இருபத்தியேழாவது வயதில் தம்பி நந்தகுமாரைப் பிடித்து அவளுக்குக் கட்டி வைத்தான். எப்படி தங்கை கல்யாணத்தில் எந்தவித அபிப்ராயமும் இருக்கவில்லையோ அது மாதிரி தன் கல்யாணத்திலும் எந்தவித அபிப்ராயமும் இவளிடம் இருக்கவில்லை.

கல்யாணத்திற்குப் பிறகு ஊர் மாறியிருந் தது. வீடு மாறியிருந்தது. சம்பாதித்துப் போடு கிற நபர் மாறியிருந்தது. இங்கே தாலி கட்டி யவன். அங்கே தம்பி...வித்தியாசம் தெரிய வில்லை. தெரியவும் விருப்பமில்லை. தாலி கட்டியவன் சம்பாதித்துப் போடுவதோடு நின்றி ருந்தால் நிம்மதியாய் இருந்திருக்கும். இரவு ஹிம்சையாய் இருக்கிறது. சம்பாதித்துப் போடு பவன் வந்து தொடும் போதெல்லாம், அன்று வீட்டிற்கு வந்து யாரோ இரண்டாவது சாப்பாடு சாப்பிட்டதுதான் நினைவுக்கு வருகிறது. வியர்த்து ஊற்றுகிறது. கை கால் எல்லாம் நடுங்குகிறது. அப்படியே கிடக்கிறாள் கல்லான மாதிரி.

''எனக்கு இதெல்லாம் ஒண்ணும் வேண் டாம்.''

முதல் முறையாய் அவளது வேண்டாம் என்கிற வேண்டுதலே நிறைவேறிப் போனது. ஓர் அதிகாலைப் பொழுதில் சரசு தண்ணீர் எடுக்கிறேன் பேர்வழி என்று நீர்குடத்தோடு படிகளில் இடறிக் கொண்டாள். கால் அகற்றி விழுந்து வயிறு பிடித்துக் கொண்டு அவஸ்தை யில் அலறினாள்.

கொட்டிய நீரோடு சிசு கலந்து போனது.

அதன் பிறகு சரசு மூன்று வருடங்களுக்குப் பிறகு முழுசாய்ப் பத்துமாதம் சுமந்திருக்கிறாள். இனி பாரம் இரக்க வேண்டும். அதற்குள் இத் தனை ரகளை...நர்ஸ் கை கடித்து, அடம் பிடித்து, இவனை எட்டித் தள்ளிவிட்டு...

''என்னைக் கொன்னுடுங்க டாக்டர்... எனக்கு ஒண்ணும் வேணாம்...''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்க்க வந்த லேடி டாக்டரிடம் பேயாய்க் கத்தினாள்.

''சரசு...'' இவன் அடக்கினான்.

''நீங்க அமைதியா இருங்க...'' டாக்டரம்மா இவனைப் பார்த்துச் சொன்னாள்.

வெளியில் வந்தான்.

தனக்கு ஏன் இப்படி வாய்த்தது...அல்லாடினான்.

டாக்டரம்மா வெளியில் வந்ததும் இவனைப் பார்த்து முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டாள்.

''நீங்க எல்லாம் என்ன புருஷ ஜென்மங்கள்! குழந்தை சரியான நிலையில இல்ல... ஒழுங்கா வைஃப்ப கவனிக்க முடியாதா என்ன... இது சீரியஸ் கேஸ் ஆப்ரேஷன் பண்ணித்தான் குழந்தையை வெளிய எடுக்கணும். இந்த ஃபாம்ல ஒரு கையெழுத்துப் போடுங்க...''

போட்டான்.

டாக்டரம்மா விருட்டென்று நகர்ந்தாள்.

''நீங்கள்ளா என்ன புருஷ ஜென்மங்கள்...''

நடு ரோட்டில் நிற்க வைத்து சவுக்கால் விளாசிய மாதிரி இருந்தது.

''ஒழுங்கா வைஃப்ப கவனிக்க முடியாதா என்ன...?''

கவனித்தான். சகலமுமாய் இருந்தான். துணி துவைத்தான். சிலிண்டர் காது திருகி அடுப்பு பற்ற வைத்தான். காபியோடு சரசுவின் விழிக்கிற கண்களுக்குத் தரிசனம் கொடுத்தான். இது காலை. இது மதியம் என்று மருந்து அடுக்கி மறக்காமல் சாப்பிடச் சொன்னான்.

அவள் சாப்பிட்டால்தானே ... அவளுக்கு ராமா...ராமா...என்று சொல்லவே நேரம் போதவில்லை.

''உங்க வைஃப்புக்கு ஆயுசு தீர்க்கம்...''

ஆப்ரேஷன் முடித்து வெளியில் வந்த டாக்டரம்மா சொல்லி விட்டு தன் அறைக்குப் போனாள்.

குழப்பமாய் இருந்தது. பின்னால் போனான்.

அறையில் டாக்டரம்மா இருக்கை காட்டினாள்.

''ஸாரி குழந்தை உள்ளேயே இறந்து போயிருந்துச்சு...''

பச்சென்று உச்சந்தலையில் ஒரு அடி...

''உங்க மனைவி கிடைச்சதுக்காக சந்தோஷப்படுங்க...''

மருண்டு போய் உட்கார்ந்திருந்தான்.

''உங்க மனைவி பற்றி சிலது கேட்கலாமா ...இங்க அட்மிட் பண்ணதுல இருந்து பாக்கறேன். உங்க மனைவி ரொம்ப விசித்திரமாய் இருக்காங்க...ஒரு முறை கூட நீங்க ரெண்டு பேரும் அன்பா அமைதியா பேசி நா பாக்கல...''

தலை குனிந்தான்.

''உங்க மனைவிக்குப் பிடிச்சது எது...?''

சத்யமாய் தெரியாது.

''இன்ஞ்செக்ஷன் போட்டுட்டு ஒன் டூ த்ரீ சொல்லச் சொன்னா ராமா ராமாங்கறாங்க. சொல்லுங்க உங்க மனைவிக்குப் பிடிச்சது எது? பிடிக்காதது எது?''

''தெரியாது.''

''உங்க அந்தரங்க வாழ்க்கை திருப்திதான ரெண்டு பேருக்கும்...''

இந்த நான்கு வருடத்தில் கூடியதை இவனால் விரல் விட்டு எண்ண முடியும். ஐயோ அதுகூடவா எப்பொழுதாவது தன் புத்தியை மீறி முரட்டுத்தனம் வெளிப்படும். நிறைய முறை நெருங்கி அவள் கல்லானது கண்டு மனம் நசுங்கிப் பின்வாங்கியிருக்கிறான்.

சொன்னான்.

''மை காட்...'' டாக்டரம்மா வாய் பிளந்தாள்.

''என்ன காரணம்...''

''தெரியாது...''

''நல்ல மனோதத்துவ டாக்டர்கிட்ட கூட்டிப் போங்க...எனி ஹவ் அவங்க இனி ப்ரகனன்ட் ஆகறது நல்லதில்ல முடிஞ்சவரை அன்பா இருந்து உங்க மனைவிக்கு உங்க மேல நம்பிக்கை வர்ர மாதிரி நடந்துக்குங்க...''

அமைதியாய் இருந்தான். பிறகு மெதுவாய் தயங்கி கேட்டான்.

''எனக்கு என் குழந்தையைப் பாக்கணும்.''

டாக்டரம்மா கூட்டிப் போனாள்.

துணி சுற்றி இருந்தது.

என் ஜீன்...

என் ரத்தம்...

என் குழந்தை...

முகம் பொத்திக் கொண்டு அழுதான்.

சரசு மயக்கம் தெளிந்து பார்த்தாள்.

''என்னாலதான உனக்கு இத்தனை கஷ்டம். இனி உன்னை கஷ்டப்படுத்தவே மாட்டேன்...''

அவள் காதோடு சொன்னான். கைகளைப் பற்றிக் கொண்டான். முதல் முறையாய் அவள் இவன் பிடிக்குள் முரண்டாமல் அடங்கினாள்.

சரசுவை இவன் உள்ளுக்குள் கருக் கொண்டான். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விசாரணை

ஜகாரியா தம்மார்

[1950-களில் நவீன சிறுகதைகளை எழுதிய அரபு எழுத்தாளர் 'ஜகாரியா தம்மார்' சிரியா தேசத்தவர். அரபு சிறுகதை வடிவத்தின் பழமைக்கு எதிராக தன் எழுதுகோலை முற்றிலும் வேறுபட்ட திசையில் புதிய நடையில் இயக்கியவர்]

□ □ □

அந்த மரங்களடர்ந்த இடுகாட்டில் ஒரு கிழட்டுபோலீஸ்காரன் நுழைந்தான். வயது தளர்ந்த அவனது பூட்சுபாதங்கள் தயங்கி தயங்கி நகர்ந்தன. சமாதிக்குள் ளிருந்த வாறே நிர்மலவானம் வெறித்திருந்தவர் கள் போலீஸ்காரனின் வருகையில் மனம் புழுங்கி கண் மூடிக் கொண்டார்கள்.

இடுகாட்டின் மையத்தில் போய் நின்று தன் கையிலிருந்த நீதிமன்ற அழைப்பாணையை ஒருமுறை பார்த்துவிட்டு அவன் கத்தினான் :

''உமர் கயாம்...உமர் கயாம்''

அவனின் கிழடு தட்டிய அழைப்புக்குரலுக்கு அந்த மயான அமைதி சிறிதும் அசங்கவில்லை. பதிலின்றி அமைதியே தொடர்ந்து நிலவியதைக் கண்டு, அவன் கைக்குட்டையை சிடுசிடுப்புடன் உருவி எடுத்தான். அதில் தன் சிடுமூஞ்சியைத் திணித்து மூக்கைச் சிந்தினான். பிறகு சினம் தாளாமல் திரும்பத் திரும்ப கத்தினான் :

''உமர் கயாம்...உமர் கயாம்... நீ நீதி விசாரணைக்காக அழைக்கப்படுகிறாய்!''

பதில் இல்லை. அழைத்த குரலே மீண்டும் மீண்டும் தூரத்து மலைக்குன்றுகளில் மெலிதாய் எதிரொலித்தது. ஏமாற்றத்தால் போலீஸ்காரனின் கிழமுக சுருக்கங்கள் மேலும் இறுகின. களைத்து ஓய்ந்தான்.

வெறுங்கையோடு போலீஸ் நிலையம் திரும்பினான். போனதும் உடனே ஒரு புகார் அறிக்கை எழுதி சமர்ப்பித்தான். அதை அவனின் தலைமையதிகாரி படித்துப் பார்த்து விசாரித்தார். பிறகு, உமர் கயாமினை இழுத்து வர ஒரு தனிப் போலீஸ் படையை அனுப்பினார்.

கைகளில் மண்வெட்டிகளோடும், மண்வாரிகளோடும் அந்தப் போலீஸ்காரர்கள் இடுகாட்டை சென்றடைந்தார்கள். கவிஞர் உமர் கயாமின் சமாதியை அடையாளம் கண்டு அதைச் சுற்றி வளைத்தார்கள். சமாதியை வெட்டினார்கள், வாரினார்கள். கடைசியில் கவிஞரை வெளியில் இழுத்து. அதன்பின் நீதிமன்றத்திற்கு கொண்டுச் சென்று சரியான நேரத்தில் ஆஜர்படுத்தினார்கள்.

கவிஞர் உமர் கயாமின் வரவால் நெஞ்சைக் குமட்டும் ஒரு வித கெட்ட வீச்சத்தை நீதிமன்றத்திலிருந்தவர்கள் உணர்ந்து முகஞ்சுளித்தார்கள். கவிஞரிடமிருந்து வரும் துர்வாடை அவரது குற்றச் சாட்சியங்களில் ஒன்றாக கருதப்பட்டு, அவரை பரிசோதனையிட ''அரசு'' மருத்துவர் பணிக்கப்பட்டார்.

பரிசோதித்த மருத்துவர் ''இத்தேசத்தின் நடப்பு வாழ்வில் அயர்வுற்று 'விரக்தியை' சந்தித்த இவரை, தேசவிரோத குற்றச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகிற விஷக்கிருமிகள் பீடித்துள்ளன. இக்கிருமிகளிலிருந்து வீசும் நெடியும், மதுவோடு இவர் கொண்டிருந்த சகவாசமுமே இத்தகைய சகிக்க முடியாத துர்நாற்றத்திற்கு காரணம்'' என்றார்.

பரிசோதனை முடிவு குற்றப் பத்திரிக்கையில் குறிக்கப்பட்டது...மன்றத்தில் சலசலப்பு நிலவியது.

ஒரு அரசனுக்கே உரிய மிடுக்கோடு நீதிபதி வந்ததும் மன்றம் அமைதியானது. அவர் தன் ஒய்யார முதுகாசனத்தில் அமர்ந்து, விழிகளை நாற்புறமும் உருட்டினார். துர்நாற்றம் வீசும் குற்றவாளிக் கூண்டை கூர்ந்துப் பார்த்தார். பிறகு மேஜையிலிருந்த குற்றப் பத்திரிகையைப் புரட்டியவாறே உமர்கயாமிடம் தன் குறுக்கு விசாரணையைத் தொடங்கினார் :

''நீதான் உமர் கயாம் என்று கருதுகிறேன். மதுவை மெச்சி கவிதைகள் எழுதியதாக உன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மதுவை துதிப்பாடிப் புகழ்வது தேசவிரோதம். நம் நாட்டில் மதுபானத் தொழிற்சாலைகள் எதுவும் இல்லையென்பதை நீ அறிவாய். ஆனால் உன் பாடல்களோ இந்நாட்டின் 'குடி' மக்களை அந்நிய நாட்டு மதுவை நாடிச் செல்லத் தூண்டு கின்றன. ஆகவேதான் இந்நாட்டுச் சட்ட விதிகளின்படி கடுந்தண்டனைக்குரிய குற்ற வாளியாக நீ கருதப்படுகிறாய். நீ சட்ட விரோதி, சரிதானே...!

''...இதை உன் குற்றமனத்தோடு ஒப்புக் கொள்கிறாயா அல்லது ஏதும் சந்தேகமுள்ளதா? ஏன் பதில் பேசாதிருக்கிறாய்? சரி...சட்டத்தின் கண்களில் சகலரும் சரிசமமே என்பதால், சந்தே கத்தைப் போக்கிக் கொள்ள உனக்கு வாய்ப் பளிக்கிறோம். மதுப்பித்தனே! கேள், கேட்டு விளங்கிக் கொள்...!''

''...நீயொரு கவிஞன் என்று கேள்விப்பட் டேன். அப்படியானால், நீ நிறையப் படிக் கவும் எழுதவும் ஞானம் கொண்டவன். அப் படித்தானே ! ஏன் பதில் பேசமாட்டேன்கிறாய்? பதிலை புரிகிற மாதிரி கவிதையாகக் கூட கூற லாம். இந்த விசேஷ அனுமதி உனது பதிலைப் பெறத்தான்...''

''...மாறாக, உன் மீதான குற்றச்சாட் டையே மறுக்கிறாயா? ஓ, நீ மிகவும் பிடிவாதக் காரன்! இப்படியே வாய்மூடிக் கொண்டிருந் தால் நான் சாட்சிகளை அழைக்க வேண்டி வரும்...''

நீதிபதியின் மிரட்டல் தொனிக்கும் கேள்வி களுக்கு இம்மியளவும் கலங்காது கவிஞர் உமர் கயாம் மௌனம் சாதித்தார். இதைப் பொறுக் காத கடுங்கோபம், நீதிபதியின் முகத்தில் எரிந் தது; தண்டனைத் தராமல் இந்தக் கவிஞனை விடக் கூடாது எனும் அடங்கா தவிப்பு ஆத்திர மாய்ப் பொங்கியது. உடனே தனக்கு வேண்டப்பட்ட சாட்சிகளை அழைத்தார்.

சாட்சிகள் சகலரும் அந்த நீதிமன்றத்தில் 'விசுவாசப் பிரமாணம்' எடுத்துக் கொண்டார் கள். அழைப்பிற்கேற்ப ஒருவர் பின் ஒருவராய் வந்து சிரந்தாழ்த்தி சாட்சிக் கூண்டில் ஏறினார்கள்.

சாட்சி — 1 (புத்தக விற்பனை யாளன்) : கனம் நீதிபதி அவர்களே! குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்த ஆள் அடிக்கடி என் கடைக்கு வந்து அதிக அளவில் புத்தகங்கள் வாங்கிச் செல்வான்.

நீதிபதி : எந்த மாதிரியான புத்தகங்கள்?

சாட்சி — 1 : பலவகையான புத்தகங்கள்... பெரும்பாலும் காதல் மயக்கம் தழுவிய கவிதைப் புத்தகங் களையே விரும்பி வாங்குவான்.

நீதிபதி : மது மயக்கத்தோடு காதல் மயக் கம் வேறா கேட்கிறது! இவனுக்கு மதுக்கிண்ணங்கள் போதாக் குறைக்கு கரைத்துக் குடிக்க கவிதை நூல்களும் தேவைப் படுவது தெளிவாகி விட்டது. கடவுள் இவனை மன்னிக்க மாட் டார்! சரி, நீ சொல். உன் கடை யிலிருந்து இவன் அரசியல் புத்த கங்கள் ஏதும் வாங்கியுள்ளானா?

சாட்சி — 1 : அரசியல் புத்தகங்களா? மேதை கைமீரே, வருந்துகிறேன். அரசி யல் புத்தகங்களை நான் விற்ப தில்லை. அம்மாதிரியான புத்தகங் களை இவன் வேறு எங்காவது தான் வாங்கியிருக்க வேண்டும்.

நீதிபதி : அப்படியே ஆகட்டும்! இவன் 'புத்தகங்கள் வாங்குகிறவன்' என்பதற்கு இது போதுமான ஆதாரம்.

சாட்சி — 1 : மேதைகைமீரே, மேலுமொரு விஷயம். இந்த ஆள் வாடிக்கை யாய் எழுது பொருட்களை வாங்கிச் செல்வதை நான் பார்த் திருக்கிறேன்.

நீதிபதி : ஓ, எழுதுபொருட்கள்! பேனா, பேப்பரைத்தானே சொல்கிறாய். கடவுள் என்றுமே மகத்தானவர்— உண்மையே எப்போதும் வெல் லும்! படிக்கவும் எழுதவும் தெரி யாதவனாக இருந்திருந்தால் இவன் ஏன் பேனாவையும் பேப்ப ரையும் வாங்கச் செல்ல வேண்டும்?!

சாட்சி — 2 (வயதான பெண்மணி) : மாட்சிமை தாங்கிய நீதிபதி அவர்களே! எனக்குத் தெரிந்த வரை இந்த மனிதன் வார்த்தை களின் காதலன். ஒருமுறை இவன் ''அழகான பெண்களைவிட வார்த் தைகளையே நான் அதிகமாக நேசிக்கிறேன்'' என்று தன் முழு இதயத்தோடு சொன்னதை கேட்டிருக்கிறேன்.

நீதிபதி இவன் அதிகமாகக் காதலிப்பது வார்த்தைகளையா ? என்ன,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வக்கிரம்! என்ன, குதர்க்கம்! ஒரு நாட்டின் மெய்யான பிரஜை முதலாவதாக தன் தாயைத் தானே நேசிப்பான்? அடுத்ததாய், தன் தாய்நாட்டை அல்லவா நேசிப்பான்!

சாட்சி — 3 (பத்திரிக்கையாளர்) : மாண்புடையீரே! இவனை நான் படித்திருக்கிறேன். இவன் கவிதைகளில் 'தேசபக்தி' துளியுமில்லை. மதுக்கிண்ணங்களைப் பற்றியும், அவற்றில் மனிதர்கள் பருகும் ஆனந்தத்தைப் பற்றியுமே இந்தக் கவிஞன் பாடியுள்ளான்.

நீதிபதி : மிகவும் நல்லது. இவன் இந்த தேசத்தையும் தேசத்து மக்களையும் நேசிக்காதவன் என்பதற்கு இது சரியான நிருபணம்.

சாட்சி — 4 (தாடி மனிதன்) : மேதகு நீதிபதி அவர்களே! இந்த ஆள் ஒருமுறை தனது தோழர்களிடம், ''எப்போதெல்லாம் உங்கள் வாழ்க்கைமேல் படிந்த நம்பிக்கையின்மையை துடைத்தெறிய விரும்புகிறீர்களோ, அப்போதெல்லாம் மதுக்கிண்ணங்களை நிரப்பிக் கொள்ளுங்கள்"— என்று அறிவுரை கூறியதை நான் கேட்டிருக்கிறேன்.

நீதிபதி : அட ஆண்டவனே! படுமோசமான ஒரு தேசத்துரோகியைப் போலல்லவா இவன் செயல்பட்டிருக்கிறான்.

சாட்சி — 5 (போலீஸ் இன்ஸ்பெக்டர்) : கனம் நீதிபதி அவர்களே! நாங்கள் மேற்கொண்ட தீவிர புலன் விசாரணையில், இந்தக் கவிஞனுக்கும் தகாத தேசவிரோத செயல்களின் தலைமை சூத்திரதாரியான 'திருவாளர் விரக்திக்கும்' நெருங்கிய உறவு இருப்பது தெரிய வந்துள்ளது. இக்கவிஞனின் சகத்தோழனான 'விரக்தி' எனப்படும் அந்த நபர் நமது நாட்டின் நலன்களுக்கு மிகமிக ஆபத்தானவன். நடப்புவாழ்க்கை மேலான அதிருப்தியை மக்களிடையே எழுப்பி நாடு முழுவதும் கலக விதைகளை தூவுகிற பயங்கரவாதி.

கலகக்காரன் விரக்தியை கைது செய்து கடுங்காவலில் வைக்க சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சாட்சி — 6 : பிணைத்திருக்கும் அடிமைச் சங்கிலியை நொறுக்க, விடுதலைக்காக போராட என்னை நிர்பந்தித்தது விரக்திதான்.

சாட்சி — 7 : அரசாங்கத்திற்கு எதிரான கலக ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள என்னை இட்டுச் சென்றது விரக்திதான்.

சாட்சி — 8 (சிறைக் கைதி) : அரசாங்கத்தின் மீது வசை பொழிய, நீதிமன்றம் மீதே குற்றம் சுமத்த என்னைத் தூண்டியது விரக்திதான்.

சாட்சி — 9 : சிறையிலிருந்து தப்பித்துச் செல்ல எனக்கு ஊக்கம் தந்தது விரக்திதான்.

சாட்சி—10 (சிறைக் கைதி) : போலீஸ்காரர்களை வெறுக்கும் எண்ணத்தை எனக்குள் ஊட்டி வளர்த்தது விரக்தி மாத்திரமே.

குற்றத் தீர்ப்பு வழங்கப் போதுமான ஆதாரங்கள் கிடைத்து விட்டதாக நீதிபதி உணர்ந்தார். தண்டனையிலிருந்து இனி இந்தக் கவிஞன் தப்பிக்கவே முடியாது எனும் பூரிப்பு அவரது கண்களில் மின்னியது. இறுதியாக தீர்ப்பின் தொகுப்புரையை அவர் படித்தார்:

''மேற்கண்ட ஆதாரங்கள், உமர் கயாம் எனப்படும் இக்கவிஞன் நாட்டின் சட்ட விதிகளிலிருந்து விலகிச் செல்லும் தேசதுரோகியாகவும், கலகக்காரனாகவும் இருந்திருக்கிறான் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாட்டில் ஐந்தாம் படையினரின் ஏஜெண்டாக செயல்புரியும் 'விரக்திக்கு' இந்தக் கவிஞன் 'எப்போதும் உடனிருக்கும்' தோழனாய் வாழ்ந்துள்ளான். ஆதலால், நம் நாட்டுச் சட்டவிதிகளின் படி இவனுக்கு நான் ஆயுள் தண்டனை விதிக்கிறேன். 'கவிதைகள் எழுதுவதற்கும் இவனுக்கு நிரந்தர தடை விதிக்கப்படுகிறது."

தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் போலீஸ் படையினர் பலத்த பாதுகாப்போடு உமர் கயாமினை நீதிமன்றத்திலிருந்து இடுகாட்டிற்கு தரதரவென்று இழுத்துச் சென்றார்கள். தேசத்துரோகத்துக்குரிய சாட்சியங்களாக கைப்பற்றப்பட்ட அவருடைய மதிப்புமிக்க பொக்கிஷங்களான கவிதை நூல்கள், மதுக்கிண்ணங்கள், பேனா, பேப்பர் சகலத்தையும் நாசம் செய்தார்கள். பிறகு கவிஞரை அவர் வாழ்ந்திருந்த சிறையறையில் திரும்பவும் திணித்தார்கள். அதன் பின்பு அந்த பூமிச்சிறையை சர்வ ஜாக்கிரதையாய் மண்ணறைந்து சாத்திவிட்டு திரும்பினார்கள்.

ஆனாலும் கவிஞரின் சகத்தோழர் 'விரக்தி' சுதந்திரமாய் விடப்பட்டார். தற்போது 'தோழர் விரக்தி' அவருக்கே உரிய தனிக் குணத்தோடும், மட்டிலா உற்சாகத்தோடும், தனது விருப்பம் போல் குறும்புத்தனங்களை குற்றங்குறையின்றி செய்பவராய் நாடெங்கும் உலவிக் கொண்டிருக்கிறார்.

தமிழில் : சமந்தா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# 'விடுதலை செய்! விடுதலை செய்! நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்!'

## நாடகம்

□
□
□

மலையாளத்தில் : வி. எம். இராமச்சந்திரன்          தமிழில்: கே. எம். வேணுகோபால்



[தென்னாப்பிரிக்காவுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுக்கும் இதயத் துடிப்பாக ஆகிவிட்ட நெல்சன் மண்டெலா, சிறையில் அடைக்கப்பட்டு 1988, ஆகஸ்டு 5-ம் நாளுடன் 26 ஆண்டுகள் நிறைவெய்தி விட்டன.

'நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்' எனும் மலையாள நாடகத்தின் தமிழாக்கத்தைத் தருகிறோம். நாடகம் அடுத்த இதழில் நிறைவு பெறும்.]

□

கோரஸ் :

(பின்னணியில்)

விடுதலை செய் !
விடுதலை செய் !
நெல்சன்
மண்டெலாவை
விடுதலை செய் !
ப்ரும்லே ப்ரும்லே
ப்ரும்லே பூம்.
ப்ரும்லே ப்ரும்லே
ப்ரும்லே பூம்.
விடுதலை செய் !
விடுதலை செய் !

நெல்சன் மண்டெலாவை விடுதலை செய் !
ப்ரும்லே ப்ரும்லே ப்ரும்லே பூம்,
விடுதலை செய் ! விடுதலை செய் !

நெல்சன் மண்டெலாவை விடுதலை செய் ! இந்த வரிகள் திரும்பத் திரும்ப முழங்கப்பட்டு, முழக்கம் உச்ச ஸ்தாயியை எட்டியதும் திரை மெல்ல உயருகிறது. சுழல் விளக்கு (சைக்ளோரமா) மட்டும் காட்சி தருகிறது. மேடையின் பின்புற மையத்தில் பார்வையாளர்களுக்கு முதுகைக் காட்டியவாறு ஒரு நாற்காலியின் மீது ஏறி நின்று கொண்டிருக்கிறான் போத்தா. போத்தா தனது வலது கையில் ஒரு கைத்துப்பாக்கியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறான். பின்னணியில் பாட்டுச் சத்தம் தூர தூரமாகச் சென்று மறைகிறது. அதைத் தொடர்ந்து போத்தாவின் குரல் : ஒன், டு, த்ரீ!

'டு' என்று சொல்லும் போது பார்வையாளர்களைப் பார்க்கிறான். 'த்ரீ' என்று சொல்லும் போது நாற்காலியிலிருந்து குதிக்கிறான். (சுழல் விளக்கு மங்குகிறது. அரங்கில் வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகமாகிறது.)

போத்தா பேய்த்தனமான சிரிப்புடன் நடு மேடைக்கு வருகிறான். (மேற்கத்திய நடனத்தின் அசிங்கமான அசைவுகளுடன்).

கைத்துப்பாக்கியைப் பார்வையாளர்களை நோக்கி நீட்டிய வண்ணம், மேலை நாட்டு கொடூர நடனத்தின் காலசைவுகளை அழுத்தமாக வைத்து பாட்டு பாடிக் கொண்டே நடக்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போத்தா : ஷூட் ஷூட் ஷூட்
ஷூட் ஷூட் ஷூட்
(திரும்பத் திரும்பக் கூறுகிறான்).

அதே தாளத்தில் காலடிச் சத்தம் கேட்கு மாறு இரண்டு ராணுவச்சிப்பாய்கள் மேடையின் இருபுறமிருந்தும் மேடைக்கு வருகின்றனர். கையில் துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டு. பாட்டின் வரிகளைத் திரும்பத் திரும்பப் பாடிய வாறு போத்தாவின் இருபக்கமும் நின்ற வண்ணம் நடனம் ஆடுகின்றனர். பாட்டு தொடர்கிறது.

போத்தா : ஷூட் லெப்ட்,
ஷூட் ரைட்.
ஷூட் ரைட்.
ஷூட் லெப்ட்.
ஷூட் தி லெப்ட்.
ஷூட் தி ரைட்.
ஷூட் தி லெப்ட்.
ஷூட் தி லெப்ட்.
(திரும்பத் திரும்பக் கூறுகிறான்.)

மிகவும் அழுத்தமான ஒரு நிலையில் போத்தா தன் காலடி வைப்பை நிறுத்து கிறான்.

போத்தா : (கத்துகிறான்.)
ஷூட் த ப்ளாக்ஸ்
ஷூட் த ரெட்ஸ்.

போத்தாவும், இராணுவ சிப்பாய்களும் பார்வையாளர்களை நோக்கியவாறு துப்பாக்கி களை நீட்டிய வண்ணம் முன்னேறி அழுத்த மாக நிற்கின்றனர்.

(அமைதி)

பின்னணியில் வெடிகுண்டு ஓசை. பெண் களும் குழந்தைகளும் அலறி அடித்து அழும் சத்தம். கூட்டங் கூட்டமாக மக்கள் அழும் அவல ஒலி. (பத்து அல்லது பதினைந்து விநாடிகளுக்கு இவை நீடிக்கின்றன.)

போத்தா நாற்காலியில் போய் அமர்கின் றான். சிப்பாய்கள் தலைகுனிந்து அடிமை களைப் போல நாற்காலியின் நான்கு கால் அருகிலும் ஒவ்வொருவராக வந்து, தலைகுனிந் தவாறே முழந்தாளிட்டு அமர்கின்றனர். அழு கைக் குரல்களுக்கிடையில், நாற்காலியின் கால் களை ஆளுக்கொன்றாகப் பிடித்துக் கொண்டு போத்தாவை சிப்பாய்கள் மெல்ல மெல்ல உயர்த்தி, தங்கள் தலைக்கு மேல் கொண்டு போகின்றனர். போத்தா பேய்ச் சிரிப்புடன், ஹிட்லர் பாணியில் பார்வையாளர்களை வாழ்த் துகிறான்.

(அழுகைக் குரல் திடீரென அடங்குகிறது. விடுதலை செய்! விடுதலை செய்! 'நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்! என்னும் குரல்கள் விண்ணை முட்டும் வண்ணம் ஒலிக் கின்றன.)

போத்தாவின் முகபாவம் மாறுகிறது. நாற்காலி கொஞ்சம் கொஞ்சமாக தாழ்கிறது. சிப்பாய்கள் துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டு சத்தம் கேட்கிற திசை நோக்கிப் பாய்கின்றனர். (வெளிச்சம் கொஞ்சம் மறைகின்றது.)

மேடையில் போத்தா மட்டும் நிற்கையில், பின்னணியில் துப்பாக்கியால் சுடும் சத்தம் தொடர்ந்து கேட்கிறது. குண்டடிப்பட்டு அலறு தல், 'விடுதலை செய்! விடுதலை செய்! நெல்சன் மண்டெலாவை விடுதலை செய்' என்னும் முழக்கங்கள், பெண்களின் தீன மான அழுகை ஒலிகள் ஆகியன கலந்த கலவை யான சப்தம் பின்னணியில் ஒலிக்கிறது. (பத்து அல்லது பதினைந்து விநாடிகள் நீடிக்கிறது.) அமைதி (ஐந்து விநாடிகள்).

திடீரென போத்தாவின் உரத்த பரிகாசச் சிரிப்பு. அந்தச் சிரிப்பின் தொடர்ச்சி போல தொலைபேசி மணி அடிக்கிறது.

போத்தா : (உரக்க) எஸ்.

(ஒரு சிப்பாய் பெரிய 'வடிவத்திலுள்ள டெலிபோன் ரிசீவரை எடுத்துக் கொண்டு வரு கின்றான். போத்தாவின் காதருகே ரிசீவரை பிடித்துக் கொண்டு நிற்கிறான்.

போத்தா : ஹலோ...போததா ஹியர் ... எஸ்... தென்னாப்ரிக்கா தான். ஆமாம்... நான் தான் ... ஓ! யார்? ... வைட் ஹவுஸ்? வெள்ளை மாளிகையா! (மகிழ்ச்சி பரவ) ம்...ரீகன் ... ஓ! ரொனால்டு...ரீ...கன்.

(திடீரென நாற்காலியிலிருந்து எழுந்து கொள்கிறான்! நடக்கிறான். நடக்கும்போது சிப்பாயும் அவன் கூடவே நடை பயில்கிறான்.)

போத்தா : ஆமாம். கேள்விப்பட்டேன். பிர மாதம், பேஷ்ங்கள். என்ன இருந் தாலும் அமெரிக்கக் கப்பற் படை என்றால், அமெரிக்கக் கப்பற் படை தான். ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லை ... இல்லை ... உங்கள் குறி எப்போதுமே தப்புவது கிடையாது. ஓ...ரீகன்!...ஒரே குண்டு வீச்சுக்கு 290-ஆ...க்ரேட்! ம்...நீங்கள் வருத்தம் தெரிவித்து அறிக்கை விட்டீர்களே, அது சரிதான். நீங்கள் அப்படி செய்தது எனக்கு ரொம்பவும் பிடித்தது...கிளாசிக்! அப்புறம் நமது சகோதரி மாகி தாட்சர் கருத்து தெரிவித்திருந்தார்களே, கவனித்தீர்களா ரீகன்? "ஏதோ கொஞ்சம் பேர் உயிர் இழந்தனர் என்பதில் வருத்தம் நமக்குண்டு என்றாலும், அமெரிக்கா தற்காப்புக்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமையைப் படைத்துள்ளது" என்று ஹ! ஹ! ஹ...! எஃகு போன்ற உறுதி கொண்ட ஒரு பெண்மணி அவர். ஓ!

(தனக்குள்ளாக) ரீ...கன், அப்புறம் மாகி, ஓ...யூ...டீ...

கறுப்பு நாய்கள் ஒவ்வொன்றிற்கும் சவப் பெட்டிகளை நான் உண்டாக்குவேன்.

ஓ! ரீ...கன், ஓ! மாகீ...ஓ!
வெளிச்சம் மெல்ல மங்குகிறது.

ரிசீவரை சிப்பாயின் கையிலிருந்து பற்றிக் கொண்டு, (ரிசீவரை) கட்டியணைக்க முயன்றவாறு...ஓ! ரீ...கன்

ஓ...மாக்கி...
என்று திரும்பத்திரும்ப கனவில்
வருவது போல் மந்தரிக்கிறான்.
(மேடையில் இருள் பரவுகிறது.)

அசரீரி : (தொடங்கும்போது சுழல் விளக்கு வாயிலாக ஒளி பரவுகிறது. ஒரு பெண் பார்வையாளர்களை நோக்கி கையை நீட்டிக் கொண்டு நிற்கிற தோற்றம்.)

விடுதலைக்கான பாதை — அது மிகவும் தொலைவில் உள்ளது.
எனது தோழர்களே! நமது பொறுமையின்மை அதன் நீளத்தை ஓர் அங்குலம் கூட குறைக்காது.
நமது இதயங்கள் கோபத்தால் வெடித்துச் சிதறுகின்றன. அது நாம் அறிந்ததே.

நமக்குத் தெரியும்—நமது மூளை பழிவாங்கும் எண்ணத்தால் தீக்கனலாய் கனன்று கொண்டிருக்கிறது என்று.

அடையாளம் தெரியாமல், அநாதரவாய் நடந்த சவ அடக்கங்கள்—

ஒரு விம்மலின் ஒலி கூட எழாமல் நடந்து முடிந்த சவ அடக்கங்கள்—

நமக்கு முன்னால், இந்த வழியாக நடந்து போனவர் ஏராளம்—

இரத்தம் சிந்தி உறைந்த காலடிகள்—

அவை நீங்களும் நானும் பின்பற்ற வேண்டிய மைல் கற்கள். துயரமும் தூரமும் நிறைந்த சுதந்திரத்தின் பாதையில் இருக்கிற சிவந்த காலடிச் சுவடுகள்—

(மேடையில் மெல்ல மெல்ல வெளிச்சம் அதிகமாகிறது. போலின் மொலாய்ஸ், வயது 50 வருகிறார்.)

போலின் மொலாய்ஸ் : (பார்வையாளர்களைப் பார்த்தவாறு)

நான் அவர்களை யாசித்துக் கேட்டேன்: 'கடைசியாக நான் அவனை ஒருமுறை பார்த்து விடுகிறேனே' என்று. அவன் என் மகன் என்று இறைஞ்சிக் கேட்டும் கூட அவர்கள் அனுமதிக்கவில்லை. ஒரு சவப்பெட்டியைத் தான் அவர்கள் எனக்குப் பார்க்கத் தந்தார்கள்.

(வெளிச்சம் மங்குகிறது.)

அசரீரி : அம்மா! எனது ரத்தம் ஒரு பெருமழையைப் போன்று பெய்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு மழைத் துளியும் எதிரியின் நெஞ்சில் ஊடுருவிச் செல்கிற நெருப்புக் கோளமாக மாறுவது திண்ணம். என்னுடைய கழுத்தில் கொலைக் கயிறு இறுகிக் கொண்டு வருகிறது. மாசற்ற ரத்தத்தால் நனைந்த இந்த பூமியில், வசந்தத்தின் வெள்ளோட்டம் நிகழுவதைப் பார்க்க இப்போது என்னால் முடிகிறது.

போலின் : நேற்று ராத்திரி முழுவதும் நானும் எனது குடும்பத்தினரும் தூங்காமல் காத்திருந்தோம்; அவனது முகத்தை கடைசியாக ஒரு முறை பார்ப்பதற்காக, போலீசாரும், குண்டர்களும் கூட தூங்காமல் வீட்டைச் சுற்றிக் காவல் இருந்தனர். அவர்கள் வாய்க்கு வந்தபடி ஆபாசமாக வசை பாடிக் கொண்டே இருந்தனர். மூன்று முறை அவர்கள் ஜன்னல் வழியாக வீட்டுக்குள் கண்ணீர்ப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகை குண்டுகளை விட்டெறிந்தனர். வீட்டுக்குள் யார் இருப்பது என்று அடிக்கடி அவர்கள் கதவைத் தட்டி கேட்டுக் கொண்டேயிருந்தனர். அவனை தூக்கிலிடுவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக நான் பிரிட் டோரியா மத்திய சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்தேன். சிறை அதிகாரி என்னிடம் சொன்னார்.

(அமைதி)

ஒளி குறைந்து கொண்டே போகிறது. அரை யிருளில் ஒரு சிப்பாய் மேடைக்கு வருகிறான். போலின் அவனிடம் கையேந்தியவாறு...

சிப்பாய் : (உணர்ச்சியை வெளிக்காட்டாத வனாக) உங்களுக்கு இங்கு வரு வதற்கு உரிமை கிடையாது. உங்கள் மகனின் பிணம் தென் ஆப்பிரிக்க அரசுக்குச் சொந்த மானது. ஒரு வாரம் கழித்து வாருங் கள். அப்போது உங்கள் மகனின் பிணத்திற்கு என்ன நெம்பர் என்று சொல்வோம்.

(சிப்பாய் போகிறான்.)

(வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக் கிறது.)

போலின் : கடைசியாக நான் அவனைப் பார்த்த போது அவன் சொன்னான் : என்னுடைய இந்தச் செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்லுங்கள். ரத்தத்திற்கு சாட்சி வகிக்கிற ஒவ் வொரு கொரில்லாவும் விடுதலைக் காகத்தான் உயிரைத் துறக்கிறான். விடுதலை கைக்கு எட்டும் தொலைவி லேயே உள்ளது. யாரும் அஞ்சத் தேவையில்லை. போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இவ்வாரெல்லாம் அவன் என்னிடம் சொன்னான்.

(பார்வையாளர்களின் விழிகளை உற்று நோக்கியவாறு அமைதியடைகிறார்.)

(வெளிச்சம் அதிகமாகிறது — அ ச இணைகிறது.)

அசரீரி : போத்தா !

என்னைப் பொறுத்த வரையில் மிகவும் விலையுயர்ந்தது எனது விடு தான். ஆனால், உங்கள் விடுத லையை அதைவிட உயர்ந்ததாகவே கருதுகின்றேன். ஆயிரக்கணக் கானோர், விடுதலைக்காக தங்களை மாய்த்துக் கொள்கின்றனர். விடு தலையை நேசிக்கிற ஒரு மக்கள் திரள் அனுபவிக்கிற துயரங்கள் ஏராளம். நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம் உங்களைப்போலவே. அதனாலேயே உங்கள் விடுதலை யையும், எங்கள் விடுதலையையும் பிரிக்க முடிவதில்லை. நான் திரும்பி வருவேன்.

போலின் : (பார்வையாளர்களின் கண்களை நோக்கியவாறே தொடர்கிறார்.)

அவன் வீரனாக இருந்தான். நிறைந்த மனதுடன் அவன் மரணத்தை எதிர் கொண்டான். எப்போதையும் விட வலிமை வாய்ந் தவனாய் அவன் காணப்பட்டான். நான் — அவனது அம்மா — நான் பெருமிதம் கொள்கிறேன். பெஞ்ச மினின் துயரம் நிறைந்த — அம்மா.

(அமைதி நிலவுகிறது.)

(மெல்ல ஒளி குன்றுகிறது.)

(இசை)

இசை முடிவுறும் வேளையில் மேடையில் மங்கிய ஒளி. ஒரு மேஜையின் மீது கறுப்பான சவப்பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. சவப் பெட்டிக்கு மேல் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருக்கிறது. சவப்பெட்டியின் மூன்று பக்கங்களிலும் மூன்று நாற்காலிகள் போடப் பட்டுள்ளன.

வெளிச்சம் அதிகமானதும், மேடைக்கு ரீகன் வருகிறார். வரும்போது டாலர் சின்னம் பொறித்த தொப்பியை ஆட்டி பார்வையாளர் களுக்கு வாழ்த்து தெரிவிக்கிறார்.

ரீகன்: நான், ரொனால்டு ரீகன்.

[ரீகன் நடுவிலுள்ள (சவப்பெட்டிக்கு பின் னால்) ந[illegible]லியி[illegible] உட்கார[illegible]ர்.]

[தாட்சர் மேடைக்கு வருகிறார். இரண்டு கைகளையும் உயர்த்தி வா[illegible]த்து தெரிவித்த வாறு]

தாட்சர் : நான்... மார்க்ரெட் தாட்சர். (வலது பக்கமாயுள்ள நாற்காலியில் போய் அமர்கிறார். ரீகனைப் பார்த்துப் புன்னகைத்தவாறு அமைதியாக இருக்கிறார்.)

[போத்தா மேடைக்கு வருகிறார். ஒரு கையை தலைக்கு மேல் உயர்த்தி ஆட்டிக் கொண்டே]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போத்தா : நான்...போத்தா, தென் ஆப்ரிக்கா...

(இடது பக்கமுள்ள நாற்காலியில் போய் உட்காருகிறார். ரீகனைப் பார்த்து புன்னகை புரிந்து அமைதியாகிறார்.)

(ஒரு சிப்பாய் ஒரு மதுபாட்டிலும் மூன்று கிளாஸ்களும் எடுத்துக் கொண்டு மேடைக்கு வந்து, பார்வையாளர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே தலைகுனிகிறான். பாட்டிலையும், குவளைகளையும் சவப்பெட்டி மேல் வைக்கிறான். போத்தா உடனே எழுந்து, மூன்று குவளைகளையும் மதுவால் நிரப்புகிறான். குவளைகளை ரீகனுக்கும், தாட்சருக்கும் கொடுக்கிறான். மூன்று பேரும் எழுந்து நிற்கிறார்கள்.)

எல்லா ஒலிகளும் இயந்திர கதியில் ஒலிக்க

மூவரும் : (எழுந்து நின்று, குவளைகளை உயர்த்திப் பிடித்து)
சியர்ஸ்.... ஓ! சியர்ஸ்....
சியர்ஸ்

தாட்சர் : (குரூரமான பரிகாசமும், பெருமிதமும் முகத்தில் பொங்க)
தூக்கிலிடப்படவுள்ள ஒவ்வொரு கறுப்பனின் ஆரோக்கியத்துக்கும், நீண்ட ஆயுளுக்கும்....

மூவரும் : சியர்ஸ்... சியர்ஸ்...
ஓ... சியர்ஸ்... சியர்ஸ்...

ரீகன் : (பரிகாசம் நிறைந்தவனாய்)
அவர்களுடைய பரந்த மார்பில் துளைத்துச் செல்கிற அமெரிக்க வெடிகுண்டுகளின் ஆத்மாவுக்காக...

மூவரும் : சியர்ஸ்... சியர்ஸ்... சியர்ஸ்...
சியர்ஸ்...

போத்தா : (கொலைவெறி தாண்டவமாடும் சிரிப்பு உறைந்த பாவத்தில்)
ஒவ்வொரு கறுப்பு நாயின் பித்து பிடித்து சிவந்த இரத்த நாளங்களின் உஷ்ண மேறின நினைவுகளுக்காக ... வெள்ளைக்காரரின் இதயம் நிரம்பி வழிகிற மனித நேயத்தின் தாலாட்டுப் பாட்டுகளுக்காக...

மூவரும் : சியர்ஸ்... சியர்ஸ்...
ஓ... சியர்ஸ்... சியர்ஸ்...

(போத்தாவும், ரீகனும், தாட்சரும் மேற்கத்திய நடன அசைவுகளுடன் சவப்பெட்டியைச் சுற்றிவந்து ஆடுகின்றனர்-மங்கலான ஒளியில்)

தாட்சர் : அவர்களுடைய கறுப்பான அம்மாக்களின் வெளுத்த தாய்ப்பாலின் ஒவ்வொரு துளிக்காக...

அவர்களுடைய சகோதரிகளின் இரத்தம் கசிகிற கறுத்த முத்தங்களுக்காக...

மூவரும் : சியர்ஸ்...சியர்ஸ்...
ஓ, சியர்ஸ்...சியர்ஸ்...

(நடனம் தீவிரமடைகிறது.)

ரீகன் : அவர்களின் கடைசி மூச்சில் உறைந்த விடுதலை என்னும் வார்த்தையின் நான்கு எழுத்துக்களுக்காக.

மூவரும் : சியர்ஸ்...சியர்ஸ்...
ஓ, சியர்ஸ்...சியர்ஸ்...

போத்தா : வெள்ளை மாளிகையில் பறந்து அசைகிற நட்சத்திர யுத்தக் கொடியின்...

தாட்சர் : அதனை உயர்த்திப் பிடிக்கிற ரொனால்டு ரீகனின் உள்ளங்கை ஆரோக்கியத்துக்காக...

மூவரும் : சியர்ஸ்...சியர்ஸ்...
ஓ, சியர்ஸ்

(மீண்டும், மீண்டும் சொல்கின்றனர்.)

போத்தா : மாகி அக்காவின் வெள்ளை வெளேரென்ற ஆத்மாவின்...

ரீகன் : உடலின் ஆரோக்கியத்துக்காக...

மூவரும் : சியர்ஸ்...சியர்ஸ்...
ஓ, சியர்ஸ்...சியர்ஸ்...

(குரல் தீவிரமாகிறது.)

மெழுகுவர்த்தியின் ஒளியில் நடைபெறுகிற நடனத்தின் பின்புலத்தில் போர் விமானங்களும், இயந்திரத் துப்பாக்கிகளும் சீறும் சத்தமும், மனிதர்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற ஒலிகளும் ஒலிக்க—

''விடுதலை செய்! விடுதலை செய்!
நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்!''

என்னும் முழக்கங்கள் அதைவிட உச்சத்தில் ஒலிக்கின்றன.

'விடுதலை செய்! விடுதலை செய்!' என்று ஒலிக்கையில் மூவரும் திடீரென அமைதியாகிறார்கள். ஒளி மறைகிறது. மெழுகுவர்த்தியின் ஒளி மட்டும் தெரிகிறது. (இசை.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இணக்கம்

நான்தான் சரி.
நான்தான் சரி,
இல்லை,
நீதான் சரி.
நீதான் சரி.
இல்லை,
நீயும் நானும் சரி.
அவர்கள் தவறு.
அவர்கள்தான் தவறு.
இவர்கள் தவறு.
இல்லை,
அவர்களும் இவர்களும்
சரி.
நாம்தான் சரியில்லை.
இல்லை,
நாம்தான் சரி.
சரிகள் தவறுகளாய்
தவறுகள் சரிகளாய்
மாறி மாறி ஜாலம்.

சரியும் தவறும்
இரண்டறப்பிணைந்த
தோற்றம்.
இதில்
நான்தான் சரி.
நான்தான் சரி.
நான்மட்டும்தான் சரி.
ஒரே தோணியில்
எதிரெதிர் திசையில்
துடுப்பு வலித்து
கைகள் அயர்ந்தன.

நின்றும்,
இருந்தும்,
கிடந்தும்,
பேசிப்
பேசி
பேசி
நாக்கும் உலர்ந்தது.
உன்னுடைய சரியைத்
தவறை,
என்னுடைய சரியைத்
தவறை,
நிலவொளியில்,
வெண்மணற்பரப்பில்,
காற்று வீசும்
இனிய பொழுதில்,
இணக்கமாய்ப் பேசி
என்றைக்குத் தெளியப்
போகிறோம்?

இருக்குமிடம் வெடித்து
பூமிக்குள் புதைவதற்குள்,
செவ்வானக் கனவுக் கண்கள்
மண்ணுக்குள் அமிழ்வதற்குள்,
சரியான திசை நோக்கி
நடக்க அல்ல —
பார்க்கா விட்டால் கூட
என்ன பயன்?

— புதிய ஜீவா

---

இசை நின்று, வெளிச்சம் மெல்ல மேடையில் பரவுகையில் ரீகன் நடுவில் உள்ள நாற்காலிக்கு வந்து இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு நிற்கிறார். ஒரு கழுகைப் போல ரீகனின் ஒவ்வொரு கையின் நிழலிலும் தாட்சரும் போத்தாவும் பார்வையாளர்களை நோக்கி நின்று கொண்டு (கைகள் இருவரின் தலையிலும் இருக்கும் வண்ணம்) போர் விமானங்களும், இயந்திரத் துப்பாக்கிகளும் சீறும் ஒலிகளும், அழுகுரல்களும் ஒலிக்க 'விடுதலை செய்! விடுதலை செய்!' என்னும் முழக்கங்களும் ஒலிக்கின்றன. இந்நிலையில் ஒருவர் அமெரிக்கக் கொடியினை இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டு தன்னை மறைத்துக் கொண்டவாறு மேடைக்கு நடுவில் வந்து நிற்கிறார். (சத்தம் ஓய்கிறது.)

(விகாரமாகச் சிரிக்கிறான்; அதைப் போலவே தாட்சரும், போத்தாவும் சிரிக்கிறார்கள்.)

ரீகன் : சர்வதேச ஜனநாயகத்தின்...
(தாட்சரும், போத்தாவும் வழிமொழிகிறார்கள்)
மகத்தான மனித உரிமைகளின்
பாதுகாப்பின் பேரில்...
(தாட்சரும், போத்தாவும் வழிமொழிய)

அமெரிக்கக் கப்பற்படையின், அணு ஆயுத ஏவுகணைகளின், நட்சத்திர யுத்தத்தின்...
(தாட்சர், போத்தா வழிமொழிய)

கருணை வள்ளலான யேசு பிரானின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் பேரில்...
(தாட்சர், போத்தா வழிமொழிய)

கறுத்து சிவந்த இனங்களுக்கெதிரான அனைத்து விதமான போராட்டங்களையும், மனித உரிமைப் பாதுகாப்பையும்...
(தாட்சர், போத்தா வழிமொழிய)

ரொனால்டு ரீகனாகிய நான் உலக மக்களின் பேரால், இதன் மூலம் என்றென்றைக்கும் பின் துணையாய் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். (இரண்டு கைகளையும் உயர்த்தி) ஆமன். தாட்சரும் போத்தாவும் ரீகனைப் போலவே கைகளை உயர்த்துகின்றனர்.

தாட்சர் மற்றும் போத்தா : ஆமன்.

(போர் விமானங்கள் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகளின் சத்தம் ஓங்காரமாக ஒலிக்கிறது. 'விடுதலை செய்! விடுதலை செய்!' என்னும் முழக்கம்—மூவரும் உறைந்து போகின்றனர்.)

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் - எமது நிலைப்பாடு

வடக்கு-கிழக்கில் இராணுவச் சூழ்நிலைகள் எதுவுமே இன்னும் அற்றுப் போகவில்லை. ஒப்பந்தத்தோடு மக்கள் அனைவரும் எதிர்பார்த்த அமைதி இன்னும் திரும்பவில்லை. ஆயினும் எதிர்வரும் பெப். 15ல் நாடு தழுவிய பாராளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. சுற்றி வளைப்புகளும், கைதுகளும், பழிவாங்கல்களும் நடந்து கொண்டிருக்கையில் பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுதற்காகக் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்திய அரசின் துணையுடன் அமைந்த மாகாண சபை மூலம் அதிகாரம் பெற்ற EPRLF, ENDLF ஆகியனவும் TELO, தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் கைகோர்த்து நின்று இத் தேர்தலில் அணிவகுத்து நிற்கின்றனர். அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும், ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணியும், தமிழ் மக்களின் துயர்துடைக்கப் புறப்பட்டுள்ளன. வழமைபோல ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரக்கட்சியும் போட்டிக்கு வந்துள்ளன. தமிழ் பேசும் மக்களின் ஒரு சாராரான முஸ்லீம்களுக்கு தனி மாகாணம் கோரும் முஸ்லீம் காங்கிரசும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் நெருக்கடி மிகுந்த காலங்களில் காணாமல் போனவர்கள் தேர்தல் வந்ததும் கிருகப்பிரவேசம் செய்யத் தொடங்கியுள்ளனர். 77ம் ஆண்டுத் 'தேர்தல் காலங்களில் பழம் பழுத்தால் வௌவ்வால்கள் வரும் என மேடையில் பிரசங்கம் செய்தவர்கள் இப்பொழுது காலங்கனிந்துள்ளதாக நினைக்க வேண்டும். துப்பாக்கி தாங்கி வட, கிழக்கு மாகாணத்தில் நுழைந்துள்ள இவர்களைக் கண்டு மக்கள் விசனமும், பரபரப்பும், அடையத் தொடங்கியுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் மனதிலைகளைப் பிரதிபலிக்கும் ஊடகமாக ஈரோஸ்அமைப்பு உருவாக்கிய வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியானது தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறது.

நாம் ஏன் வேட்பாளர்களை நிறுத்தினோம்? அமைதியின் பின் ஏற்படும் தேர்தலே முறையான ஜனநாயக செயல்வழியாக இருக்கும் என்பதில் ஈழவர் ஜனநாயக முன்னணியானது உறுதியாக இருக்கிறது. ஆயினும் கடந்த மாகாண சபைத் தேர்தலின் பின் அதிகாரத்திற்கு வந்த சக்திகள் அமைதியை நிலைநாட்டுவதற்குப் பதிலாக இயக்க மோதல்களுக்கு அடிகோலிவருவதை இனங்கண்டு கொண்ட நிலையில், இப்புதிய இக்கட்டான சூழ்நிலையை எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு இம்முன்னணி உருவாகியுள்ளது. இதனால் இத்தேர்தலை முற்றாகப் புறக்கணித்து விடுவது இத்திசை மாறிய சக்திகளுக்கு மேலும் வலுவூட்டுவதாகவே அமைந்து விடும்.

பாராளுமன்றப் பிரவேசம் மூலம் தமிழ் பேசும் மக்களது பிரச்சனைகளுக்குப் பரிகாரம் கிடைக்காது என்பதைக் கடந்த காலங்கள் எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளதை நாம் மறந்து போகவில்லை. இதனாலேயே நாம் 'இத் தேர்தலை பாராளுமன்றத்தின் நுழை வாயிலாகக் கருதி வேட்பாளர்களை நிறுத்தவில்லை, பதிலாகப் புதியசக்திகளின் போக்கு தவறானது என்பதை சுட்டிக் காட்டவும், அவர்களின் கெடுபிடிகளை எதிர் கொள்ளவுமே தேர்தலைப் பயன்படுத்த முன்வந்துள்ளோம். எமது நிலைப்பாடு குறித்து இங்கு எடுத்துச் சொல்வதற்கு முன் கடந்த கால நிகழ்வுகளை உங்களிடம் மீட்டுக் கொள்ள விரும்புகிறோம்.

**கடந்தகாலங்களில் :** 1977ல் நடைபெற்ற தேர்தலின் போது தமிழ் பேசும் மக்கள் ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்து தம்

பாராளுமன்றத் தேர்தல்
ஈரோஸ் நிலைப்பாடு

பாராளுமன்றத் தேர்தல்
ஈரோஸ் நிலைப்பாடு
பாராளுமன்றத் தேர்தல்
ஈரோஸ் நிலைப்பாடு
பாராளுமன்றத் தேர்தல்
ஈரோஸ் நிலைப்பாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடைய கருத்துக்களைத் தெளிவு படுத்தியிருந்தனர். ஜனநாயக வழிப்பட்ட இக்கோரிக்கையை இலங்கை, இந்திய அரசுகள் இன்னமும் அங்கீகரிக்காத நிலையில் இருந்தே . நாம் கடந்த காலங்களை மீட்க வேண்டியிருக்கின்றது. தமிழ் பேசும் மக்களின் எண்ண அபிலாசைகளைப் புறக்கணித்து இலங்கை, இந்திய அரசுகள் வெறுமனே தமது சொந்த நலன்களை காக்க எத்தனித்ததன் விளைவே தொடர்ந்து வரும் அனர்த்தங்களுக்கும், அமைதியின்மைக்கும் அத்திவாரமாய் விளங்குகின்றது.

ஈழக் கோரிக்கை முன்வைக்கப் பட்டபோது இலங்கை அரசு அதை வன்முறை மூலம் எதிர்கொள்ள முனைந்து நின்றது. அதே வேளை இந்திய அரசு இக் கோரிக்கையைத் தனது பிராந்தியப் பாதுகாப்பிற்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள எண்ணங்கொண்டது. 83ம் ஆண்டு இனம் முழுவதற்குமான படுகொலைகள் மூலம் தீவிரப்படுத்தப்பட்ட போது ஈழக் கோரிக்கைக்குப் பாராளுமன்ற தடைவிதித்த போதும் ஆயுதம் தாங்கிய போராட்டம் உக்கிரம் அடைந்தது. இவ் ஆண்டிற்கு முன்பிருந்தே ஆயுதம் தாங்கிய போராட்டம் ஆரம்பமான போதும் 83ன் பின்னரே இந்தியா நோக்கி பொதுக்குரல் உக்கிரமடைந்தது. இக்காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராட முனைந்த அமைப்புகள் ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்து தமக்குள்ளே இணக்கம் கண்டு ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்ற அமைப்பையும் உருவாகியிருந்தனர். இவ்வேளையில் விடுதலை அமைப்புகளின் காத்திரமான நடவடிக்கையினால் நிர்ப்பந்திக்கப்பட்ட சிறிலங்கா அரசு திம்புவில் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டியதாயிற்று. திம்பு முதலான பேச்சுவார்த்தைகளில் அனைத்து அமைப்புகளும் ஒன்றுபட்டு நின்று நான்கு அம்சக்கோரிக்கையை முன்வைத்து தமிழ் ஐக்கியத்தை எடுத்துக்காட்டி இருந்தனர். இலங்கை, இந்திய அரசுகள் இம்மாநாட்டில் தத்தமது நலன் குறித்து முடிவுகள் விடுத்தன. சிறிலங்கா அரசு நான்கு அம்சக்கோரிக்கையை ஒப்புக் கொள்ளாமல் பேச்சுவார்த்தையை முறித்துச்சென்றது. யுத்த நிறுத்தம் நிலவிய இக் காலங்களில் ஆயுதபாணிகளாக வெவ்வேறு அளவுகளில் வீக்கம் பெற்ற விடுதலை அமைப்புக்கள் ஒன்றோடு ஒன்று முரண்படும் நிலைக்கு இட்டு வந்தன. இயக்கங்கள் தமக்குள்ளேயே படிப்படியாக மோதி ஒன்றை ஒன்று அழிக்கும் நிலைக்கு வந்த காலங்களில் இந்திய அரசானது தமிழீழ விடுதலைப் புலிகளோடு மட்டுமே நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடிவு செய்திருந்தது. பெங்களூர்ப் பேச்சுவார்த்தைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்க நிலையில் இருந்த வேளையில் இலங்கை அரசினால் அது நிராகரிக்கப்பட்டது. இதன் பின்பு இந்திய அரசு தனது போக்கை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் உரிமையைத் தனக்குத் தானே வழங்கி செயற்படத் தொடங்கியது. இந்த வகையில் இலங்கை அரசோடு இணக்கத்திற்கு வந்ததன் விளைவே இலங்கை-இந்திய ஒப்பந்தமாகும்.

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளாத இந்த ஒப்பந்தம் இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பை மட்டுமே உறுதிப் படுத்திக் கொண்டது. தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சனையை வெறுமனே மொழிப் பிரச்சனையாகவும், வடக்கு—கிழக்கு இணைப்பு பிரச்சனையாகவும், அதிகாரப் பரவலாக்கம் பற்றிய பிரச்சனையாகவும் இது சித்தரிக்கிறது. இவ் ஒப்பந்தம் ஏற்பட்டபோது இது தற்காலிக ஆறுதல்தரவல்லது என்றும் ஒரு பிரச்சனையையும் இது தீர்த்து வைக்கவில்லை என்றும் எமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தியிருந்தோம். இவ் ஒப்பந்தம் திருத்தப் பட வேண்டியதொன்று என்பதே எமது நிலைப்பாடாக இன்றும் விளங்குகின்றது.

**இலக்குகள் திசைமாறிப் போயின :** ஒப்பந்தத்தின்படி இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முழுமையான இணக்கத்திற்கு இந்திய அரசு வந்திருந்த வேளையில், இலங்கை அரசு திரைமறைவில் இருந்து செயலிழக்கச் செய்திருந்தது. அதுமட்டுமல்லாமல் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக ஆயுதங்களைக் களைவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த இலங்கை அரசு, இந்திய இராணுவம்—புலிகள் மோதல் நிலையை சாதுரியமாக உருவாக்கிவிட்டது.

இலங்கை விரித்த வலையில் தடுமாறிய இந்திய அரசு, காப்பாற்ற வந்த தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகவே துப்பாக்கி ஏந்தும் நிலைக்கு ஆளாகியது. 87 ஒக்ரோபர் 10 முதல் தமிழ் பேசும் மக்கள் புதிய வடிவில் அடக்குமுறையை மீண்டும் சந்திக்கத் தொடங்கினர். திசைமாறிப்போன இலக்குகளால் அமைதி ஏற்படுத்தப்படும் சூழ்நிலையை மீண்டும் எய்துவதற்காக ஈழத்தின் பல பாகங்களிலும் யுத்த நிறுத்தம் கோரி பிரச்சாரங்கள் நிகழ்ந்து வந்தன. இந்நிகழ்வுகளுக்குப்பின், காலந் தாழ்த்தி நிகழ்த்தப்பட்ட யுத்த நிறுத்தமானது பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலைகளை உருவாக்காமல் போனது துரதிஷ்டமே.

**தேர்தல் மூலம் அமைதி :** இந்திய அரசானது ஒரு தலைப்பட்சமாய் பிரகடனம் செய்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்த நிறுத்தம் பலனற்றுப் போக வடக்கு–கிழக்கில் நிகழ்த்தப் பெறும் தேர்தல் ஒன்றின் மூலமே அமைதி நிலை உருவாக்க முடியும் என்ற முடிவுடன் செயல்படலாயிற்று. இந் நிலையில் அமைதியின் பின் தேர்தல் என்பதே முறையான ஜனநாயக வடிவமாக இருக்கும் என்ற வகையில் இத் தேர்தலில் பங்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நிலைப் பாட்டை நாம் வெளிப்படுத்தியிருந்தோம். ஆயினும் EPRLF, ENDLF முதலானவை இதற்குப் புறம்பாகத் தேர்தல் மூலம் அமை தியை நிலை நாட்டப் போவதாகக் கூறி தேர் தலில் பங்கெடுத்துக் கொண்டனர். அப் பொழுது நாம், மக்கள் முன்வந்தளிக்கும் வாக்குகளுக்கு தடையாக இருக்க மாட்டோம் என்ற எமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தி யிருந்தோம். குறிப்பிட்ட தினத்தில் கிழக்கு மாகாணத்திலே நடந்த இத் தேர்தல் மூலம் மக்கள் தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்தி யிருந்தனர். மக்கள் முன்வந்தளித்த வாக்குகள் ஒவ்வொன்றும் தாம் அமைதி வேண்டி நிற்பதை யும், முஸ்லீம்கள் தமது தனித்துவத்தை அங்கீ கரிக்க கோருவதையுமே சுட்டிக் காட்டியுள்ளது. ஆனால் மக்களின் இந்த எதிர்பார்ப்புக்கு மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட சக்திகள் இயக்கங்களைப் பழிவாங்கும் நடை முறைகளையே தமது போக்காக இனம் காட்டி நிற்கின்றன. அதிகாரம் கிடைத்த சில நாட் களுக்குள் திருகோணமலையிலும், பிற பகுதி களிலும் எமது உறுப்பினர்களும், ஆதரவாளர் களும், பொதுமக்களும் கைது செய்யப் பட்டுச் சித்திரவதைக்குள்ளாகி பழிவாங்கப் பட்டிருக் கின்றனர். இப்போக்கை ஒரு ஜனநாயகச் செயல் முறையென எவரும் நியாயம் கற்பிக்க முடியாது.

**புதிய அரசியல் சூழ்நிலை :** தற்போதுள்ள புதிய அரசியல் சூழ்நிலையானது தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கும் திசையை நோக்கிச் செல்லாமல் இயக்க மோதல்களை நோக்கிச் செல்வதாகவே நாம் உணர்கிறோம். இச்சூழ்நிலையானது தமிழ் பேசும் மக்களுக் குரிய அமைதியை மீட்டுத் தராது என்ற முடி வுக்கு நாம் வருகிறோம். இவ்வேளையில் இயக்க பேதமற்ற ஒருநிலையை உருவாக்கக் கூடியதாகவும், ஒரு பொதுப் பிரதிநிதித் துவத்தை உருவாக்கி போட்டியற்ற முறையில் பாராளுமன்றத் தேர்தலை பயன்படுத்த நாம் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இச் சந்தர்ப்பத்தில் எமது நிலைப்பாட்டை மக்கள் முன்வைத்து அதற்கான அங்கீகாரம் கோரும் வகையில் இத்தேர்தலைப் பயன்படுத்தவே நாம் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். ஈழவர் ஜனநாயக முன்னணியானது தான் பற்றி நிற்கும் கொள்கைத் தீர்மானங்களையும் உடனடி அமைதிக்கான யோசனைகளையும் இங்கு தருகிறது.

**சொற்கைத் தீர்மானங்கள் :** தமிழ் பேசும் மக்கள் மத்தியில் போராட்ட சக்தியாய் தம்மை இனம் காட்டியவர்களிடையே திம்பு மாநாட்டில் எய்தப்பட்ட நான்கு அம்ச இணக்கத்தை அடி யொற்றி கொள்கைகள் இங்கு முன்மொழியப் படுகின்றன.

1. இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்.
2. வடக்கு-கிழக்கு, மலையகப் பகுதிகளில் செறிவாக வாழும் தமிழ் பேசும் மக்கள் தமக்கான பாரம்பரிய பிரதேசத்தை யுடையவர்கள்.
3. 1948 பெப். 4ல் இலங்கை பிரித்தானி யரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட போது இலங்கைப் பிரஜைகளாக கணிக்கப் பட்டவர்களும் அவர்களது இயற்கை அதிகரிப்புமே தமது சொந்த விசயங்களைத் தீர்மானிக்கும் காலம் நியாயமாகும்.
4. வடக்கு-கிழக்கு மலையகப் பகுதிகளில் செறிவாக வாழும் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள்.
5. தமிழ் பேசும் மக்கள் பிரச்சனைகளுக்கான இடைக்காலத் தீர்வாக தேசிய அமைப்பு முறை ஒன்றை இலங்கையில் நிறுவிக் கொள்ள உரித்துடையவர்கள்.

**அமைதிக்கான யோசனைகள் :**

தற்போது நிலவும் நெருக்கடியான சூழ் நிலைகளில் இருந்து அமைதி உருவாவதற்கு ஏதுவாகப் பின்வரும் விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென ஈழவர் ஜனநாயக முன்னணி யானது தனது யோசனைகளை முன் மொழி கிறது.

1. நிரந்தர யுத்தநிறுத்தம் பிரகடனப்படுத் தப்படுவதுடன், பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு, அரசியல் கைதி களும், நிபந்தனையின்றி விடுவிக்க வழி செய்தல்.

2. விடுதலை அமைப்புகளிடையே நிபந் தனையற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தி இணக்க நிலைக்கு வழியமைத்தல்.

3. தமிழ் பேசும் மக்கள் தமது பாது காப்பைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய வழிவகையை அங்கீகரிக்க வகை செய்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இல்லாதது

அணைந்து போயிற்று.
யாரிதைச் செய்தது
காற்றா கடலலையா
நீயா நானா
எவருக்குமே புரியாத
ஏதோ சூட்சுமமா.

சூரியக் கொழுந்தை
அணைக்கும்
தெம்புள்ள கைகளா
எதற்கதைச் செய்தது.

காட்சிகளின் இருப்பில்
உயிர்ச் சரமொன்றில்
எனக்குத் தெரிந்தது
உறுதியாய்-

அழுக்கும் அவலமும்
சதையுத்தமும்
சத்தியக் காணலும்
யுகங்களுக்குள் ஒளிந்தன.
நோக்கங்கள்
பிரதானமற்றுப் போயின

நெடுகிலும்-
தப்பிதமில்லாத காலடிகள்
நோக்கமற்று நடந்தன.
அணைந்தாலென்ன

வெளிச்சத்தை ரகசியமாய்
நேசிக்கும் சிலதுகூட
இருட்டே சுகமென்று
குரல் கொடுக்கும்.

அணைந்தாலென்ன

பார்த்தலின் கூர்மையைப்
பறித்தாலென்ன

காதுக்குள் மனசுபுக
சிரிப்பொலிகள்
கேட்கும்
உருவமற்று-

நா. விச்வநாதன்

## நயம்

பூவே!
உனக்கென்ன
ஆயுள் இன்று மட்டும்!
நானோ?
தினம் மலர வேண்டும்!
ஒரு சில கணம்
வாழ்ந்தும்
மணக்கும்
நீ
என்னைப் போல
என்றும்
ஏன்
கவிதை போல்
நித்யம்
நீடூழி
மணக்க முடியுமா?
விலை கேட்கும்
உலகில்
உன்னைப் போல
பரிசுத்தமாக
ஒரு கணம்
நிறம் காட்டும்
தூய்மை ஏன்?
அழுக்காய்
சிக்கு சிக்காய்
கசடாய்
தினமும் விலை
போகும்
என் வாழ்வும்
உனக்கேது?
தினம் தினம்
மலியும் மனிதம்
என்றும் சிதைந்தும்
வளரும்
எங்கள்
நயம்!

ப்ரகாஷ்

---

4. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்டுள்ள இலங்கை, இந்திய இராணுவத் துறையினர் படைக்குறைப்பு, வெளியேற்றம் குறித்து கால எல்லையை நிர்ணயித்தல்.

5. தமிழ் பேசும் மக்களின் தேசிய அந்தஸ்த்தை நிலைநிறுத்தும் வகையில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை திருத்த வகை செய்தல்.

மேற்குறிப்பிட்ட கொள்கை முடிவுகளை யும், அமைதிக்கான யோசனைகளையும் ஒரு மித்த நிலைக்கு இட்டு வரும்வகையில் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த அனைத்து சக்திகளும் உள்ளடக்கிய ஒரு தேசிய மாநாட்டின் மூலம் பொதுநிலை எய்த ஈழவர் ஜனநாயக முன்னணியானது தீர்மானித்துள்ளது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# க.நா.சு.வும் தமிழ் இலக்கியச் சூழலும்

**ஏ. எஸ். பன்னீர்ச்செல்வன்**

எனக்கும் நாகார்ஜுனனுக்கும் அப்படி என்னதான் ஒரு பொருத்தமோ தெரியவில்லை. நாங்கள் இருவரும் யாரைப் பற்றியாவது இரண்டு மாதங்கள் தொடர்ந்து விவாதித்தால் அவர்கள் இறந்து விடுகிறார்கள். ஜான் ஆப்ரகாம், ஆதவன், ஐரோப்பிய பத்திரிக்கையாளர் பெக்கி என்று தொடரும் அந்த அபாக்கிய வரிசையில் கடைசியாக இடம் பெற்று இருப்பவர் க.நா.சு. இப்பொழுது நாங்கள் இருவரும்-நாங்கள் நேசிக்கும் மனிதர்களைப் பற்றி பேசுவதை நிறுத்தி விட்டோம்.

இறந்தது க.நா.சு. என்ற வயதான மனிதனா அல்லது ஒரு இயக்கமா என்றால் வரட்டு மார்க்சியவாதி கூட கண்களை மூடிக் கொண்டு இயக்கம் என்று பதிலளிப்பார். இலக்கிய எழுத்தை மட்டுமே நம்பி 77 வருடம் வாழ்ந்து, தமிழை வளப்படுத்தி, தமிழினால் மற்ற மொழிகளையும் வளப்படுத்தி கண் அறுவை சிகிச்சைக்குக் கூட பணமில்லாமல் டெல்லி குளிரில் உறைந்து போய்விட்டார் க.நா.சு. எனக்கும் அவருக்கும் ஐம்பது வருட இடைவெளி—வயதில். ஆனால் அவருடன் இயல்பாக பழக முடிந்த அளவிற்கு சமவயது நண்பர்களுடன் சகஜமாகப் பழக முடியவில்லை. 1985-ல் டெல்லியிலிருந்து சென்னைக்கு க.நா.சு. குடி பெயர்ந்ததிலிருந்து அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. POINT — COUNTER POINT — பத்திரிக்கையில் நானும் அவரும் ஒன்றாக சேர்ந்து பணியாற்றினோம். எனக்கு பணம் கிடைத்தது. க.நா.சு. விக்கு இலவசமாக இரண்டு பிரதிகள் தான் கிடைத்தன. இந்த சூழலில் தான் அவருக்கு சாகித்திய அகடமி விருது! க.நா.சு. வின் எதிர்வினை : ''பத்து வருடங்களுக்கு முன் எனக்கு இந்த விருது கிடைத்து இருந்தால் வேண்டாம் என்று ஒதுக்கி இருப்பேன். இன்று எனக்கு பத்தாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. மறுக்க முடியவில்லை. இளமையில் இறந்து விடுவது ஒரு விதத்தில் அதிர்ஷ்டவசமானது. இது போன்ற துர்பாக்கியமான சந்தர்ப்பங்களைச் சந்திக்க அவசியம் இருப்பதில்லை.''

நான் சந்தித்த பல இலக்கிய நண்பர்கள் எப்பொழுதும் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்பார்கள் : ''க.நா.சு. விடம் குறைகளே இல்லையோ ?'' குறைகள் இல்லாதவர்கள் யாரும் இல்லை. இதற்கு அவர் என்ன விதிவிலக்கா ? தமிழ் மொழிக்கு அவர் கொடைவள்ளலாக விளங்கியதை நன்றி கெட்ட தமிழர்கள் மறந்துவிட்ட காரணத்தினாலும்; தன்னுடைய எழுத்துக்களைப் பிரபலப்படுத்திக் கொள்ள பல வழிகள் இருந்தும், அந்த வழியை கைவிட்டு விட்டு, இந்த மொழியில் வந்த எல்லா தரமான எழுத்துகளையும்—இளங்கோ முதல் சா. கந்தசாமி வரை—ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலக இலக்கியத்தில் அவற்றுக்கு ஒரு இடத்தைப் பெற்ற தருவதற்கு அவர் பட்டபாடு, இதற்கு பின்னால் மறைந்து இருந்த சுயநலமின்மை, ஆகியவற்றால் அவருடைய குறைகளை விட நிறைகளே அதிகமாகத் தெரிகிறது.

க.நா.சு.வின் இலக்கிய வாழ்வை—எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், விமர்சகர்—என நான்காகப் பிரிக்கலாம். (அவர் தொடர்ந்து பத்திரிக்கைகளில் எழுதினாலும் பத்திரிக்கையாளர் என்று அவரை அழைக்க முடியாது). இதில் விமர்சகர் க.நா.சு. தான் அதிகம் அறியப்பட்டவர். அதிகம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவர். இதனால் விமர்சகர் க.நா.சு. வை முதலில் ஆய்வு செய்வோம்.

விமர்சனம் செய்வதற்கு அடிப்படையான தகுதி மூலங்களைப் படித்து இருப்பதுதான். க.நா.சு. விடம் அந்தத் தகுதி முழுமையாக இருந்தது. மூல நூல்களைப் படிக்காமல், ''பற்றி'' புத்தகங்களைப் படித்து விட்டு ''இன்டெலக்சுவல்'' ஆக நம் முன் உலா வரும் பல்ரை நமக்குத் தெரியும். க.நா.சு. நல்ல நூல்கள் இவைதான் இன்று சிலவற்றைப் பட்டியல் போட்டுக் காட்டியதைத் தவிர பெரிதாக என்ன விமர்சனம் செய்து விட்டார் என்று ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. இதுபற்றி ஒரு முறை க.நா.சு. சொன்னது : ''ஒவ்வொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முறையும் தமிழ் வாசகனுக்கு முதலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. சிறு பத்திரிக்கை வாசகன் என்று அழைக்கப்படுகின்றவனுக்குக் கூட நாம் உலக இலக்கியத்தை ஆத்திசூடியிலிருந்துதான் துவங்க வேண்டியதாக இருக்கிறது. இதில் 'உருவம்', 'உள்ளடக்கம்' பற்றி சற்று விரிவாக கூறி விட்டு, அதை விளக்கும் வகையில் சில நல்ல நாவல்களை, சிறுகதைகளை அடையாளம் காட்ட வேண்டிய அவசியம் எனக்கு உள்ளது. இது ஒரு வகையில் இலக்கிய உணர்வை வளர்க்க உதவியும் இருக்கிறது. ஒரு இலக்கியப் படைப்பை அக்குவேறு, ஆணி வேறாக அலசுவதைவிட, தரமற்றதை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய பெரும் பொறுப்பு என்னிடமும், ஏன் ஒவ்வொரு தரமான வாசகனிடமும், இருப்பதாக நான் நினைக்கிறேன். இதன் காரணமாகத்தான் தரமான இலக்கியத்தைப் பட்டியலிட்டுவிட்டு, தரமில்லாதவற்றைக் கடுமையாக சாடும் முயற்சியில் நான் இறங்கினேன். நம் சூழலில் அது மிகவும் அவசியம். தரமானவற்றை எதிர்த்து இங்கு சக்திவாய்ந்த பலமான ஒரு அணி செயல்படுகிறது அரசியல், கலை, பத்திரிக்கை, விஞ்ஞானம், முற்போக்கு வரட்டுத்தன்மை, சுயமரியாதை புதைகுழி என்று எல்லாம் ஒன்றாக சேர்ந்து செயல்படுகின்றன. இதில் நான் ராஜாஜியையும், கல்கியையும் சாடவேண்டியது அவசியமாகப் போய் விட்டது. முற்போக்குக்காரர்கள் 'பெந்தகோஸ்த்'கள் போல தாங்கள் சொல்வதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு வளர்ச்சிக்கு வழியில்லாத திசையில் போய் விட்டனர். அன்று அவர்கள் 'Boris Pasternak' 'Alexander Solzenitsin' போன்றவர்களையும் கடுமையாகத் தாக்கினார்கள். ஸ்டாலின் தவறுகளை எடுத்துக்காட்டினால் C.I.A. என்று முத்திரை குத்தக்கூடிய அளவிற்குத் தான் அவர்களின் 'அறிவு முதிர்ச்சி' இருந்தது; இன்றும் அப்படியே இருக்கிறார்கள். ரஷ்யாவிலேயே மாற்றங்கள் வந்து விட்டன. மறுபுறம், அரசியல் செல்வாக்குக் காரணமாக மு.வ. போன்ற நுண்ணிய இலக்கிய அறிவு துளிக்கூட இல்லாத பண்டித முண்டங்கள். இந்த நிலையில், இலக்கியத்தைப்பற்றி எப்பொழுதும் அறிமுகக் கட்டுரை மட்டுமே எழுதக்கூடிய சூழ்நிலையில் பட்டியல் போடுவதுதான் தரமான நூல்களை வெளிச்சம் போட்டு காட்டுவதற்கு ஏற்ற முறையாக எனக்குத் தோன்றுகிறது."

க.நா.சு.வின் இந்த விளக்கத்தில் உள்ள நியாயத்தை யாரும் மறுக்கமுடியாது. மேலும், நம் சூழலில் க.நா.சு.வை விட்டு அடுத்த தளத்திற்கு சென்ற, விமர்சகராக எம். ஏ. நுஃமான் ஒருவரைத்தான் குறிப்பிட முடியும். பேராசிரியராக இருந்த போதிலும் வரட்டுக் கூப்பாடுகளுக்கு ஆளாகாமல், விரிவாகவும் ஆழமாகவும் அதைவிட முக்கியமாக யாரிடத்திலும் துவேஷம் பாராட்டாமலும் நுஃமான் மட்டும் தான் தமிழ் விமர்சனம் எழுதுகிறார். மற்றவர்கள் எல்லாரும் க.நா.சு. சாதித்ததில் பாதி கூட சாதிக்கவில்லை. சி. சு. செல்லப்பாவிற்கு பி. எஸ். ராமய்யாவும், ந. பிச்சமூர்த்தியும் தான் பிரதானம். கைலாசபதியும், சிவத்தம்பியும் முடிவுகளை முதலில் எடுத்து விட்டு அதற்கு ஏற்றாற்போல் தங்கள் விமர்சனங்களை திரித்து, வளைத்து எழுதினர். வெங்கட் சாமிநாதனும், தருமு சிவராமும் ஒருவர் மீது மற்றொருவர் வாரி இறைத்த சகதிதான் அதிகம். தீவிர குழு மனப்பான்மைக்கு ஆளானவர் சுந்தர ராமசாமி.

மேலும் க.நா.சு. கண்டுபிடித்தவர்கள் என்று ஒரு பட்டியலை நம்மால் போட முடியும். சண்முக சுந்தரம் முதல் வண்ண நிலவன் வரையில் அந்த பட்டியல் நீளும். அவர் பட்டியலில் உள்ளவர்களில் தரத்தைப்பற்றி மற்றவர்களால் குறை சொல்ல முடியவில்லை என்பதும் க.நா.சு. வின் கூரிய விமர்சனப்பார்வைக்கு சிறந்த சான்று. மற்றவர்கள் புதிதாக ஒரு எழுத்தாளரை கூட இவர் தரமான எழுத்தாளர் என்று எடுத்துக் கூறியது கிடையாது.

அடுத்து கவிஞர் க. நா. சு. வைப் பார்ப்போம். நவீன இலக்கியத்தில் வெகு சீக்கிரமாக பற்றுக் கொண்ட க. நா. சு. மேற்குலகின் பல்வேறு கவிதைப் போக்குகளால் கவரப்பட்டார். சங்க காலம் தொட்டு தமிழில் தொடர்ந்து வந்த செய்யுள் மரபு இறுகி, கடுமையாகிவிட்ட காலத்தில், பாரதியாரால் இலகுவாக்கப்பட்ட கவிதைத்துறையை செழுமைப் படுத்தி செப்பீட்டுகளைச் செய்து, அதற்கு 'புதுக்கவிதை' என்று பெயரிட்டவர் க. நா. சு. மயன் என்ற பெயரில் க. நா. சு. எழுதிய கவிதைகள் பல "புதுக்கவிதை" வகையைச் சார்ந்ததாகவும், சில ஐரோப்பிய மரபில், இரண்டாம் உலகப்போருக்கு பின் தோன்றிய "எதிர்க் கவிதை" வகையைச் சார்ந்ததாகவும் இருந்தன. புதுக்கவிதைகளில் க. நா. சு. வின் படிமங்கள் அருபமானவை. தமிழுக்கு மிகவும் பழகியது போல் தோன்றும், ஆனால் முற்றிலும் புதியவை. கடவுள், ராமன், ராவணன், பளிங்குக் கல்லில் நிலா ஒளி, சீதை, பூம்புகார் என்று நமக்குத் தெரிந்த விஷயங்கள் நமக்கு தெரியாத ஒரு அர்த்தத்தை க. நா. சு. வின் கவிதைகள் தருகின்றன. ஞானக் கூத்தன், ஆத்மாநாம், பிரம்மராஜன் மற்றும் நகுலன் ஆகியோர் கவிதைகளில் தென்படும் ஸர்ரியலிஸத் தன்மைகள், தருமு சிவராமின் கவிதைகளில் கிடைக்கக் கூடிய அரிய சொற்கட்டுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு விநோதமான விநோத உணர்வுகள் க. நா. சு. வின் கவிதைகளில் இருந்ததில்லை. அந்த வகையில், க. நா. சு. கவிதையை பொருத்த வரையில் மிகவும் நவீனமானவராக நாம் கொள்ள முடியாது. எழுத்தாளர் க. நா. சு. வையும் இரண்டாகப் பிரிக்கலாம் - சிறுகதை ஆசிரியர், நாவல் ஆசிரியர். இதில் க. நா. சு. எழுதிய பல சிறுகதைகள் இன்று வரையில் வெளிவராமல் எழுத்துப் பிரிதி யாகவே இருக்கின்றன. 1986-ம் ஆண்டு, ஒரு நாள் நாங்கள் சேர்ந்து கணக்குப் போட்டுப் பார்த்ததில் க. நா. சு. 200 க்கும் மேற்பட்ட சிறு கதைகளை எழுதியிருப்பது தெரிந்தது. இதில் பல கதைகளை, எழுத்துப் பிரதியாகவும்; சிலவற்றை மொழி பெயர்ப்பாகவும் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. விஞ்ஞானக் கதைகள் உட்பட எல்லா "வடிவங்" களையும் க. நா. சு. திறம்படக் கையாண்டு இருப்பதை உணர முடிந்தது. நம்முடைய துரதிர்ஷ்டம் இவற்றில் பல இன்னமும் அச்சு வடிவம் பெற வில்லை.

க. நா. சு. வின் முதல் நாவல் **பசி** 1942-ல் வெளி வந்தது. முதலில் எழுதிய **சர்மாவின் உயில்** 1945-ல் புத்தகமாக வெளிவந்தது, பின்னர் வரிசையாக **பொய்த்தேவு** (1946), **ஏழு பேர்** (1946), **ஒரு நாள்** (1951), **அசுர கணம்** (1956), **வாழ்ந்தவர் கெட்டால்** (1957) **ஆட்கொல்லி** (1958), **பெரிய மனிதன்** (1959), **அவரவர் பாடு** (1963) ஆகிய நாவல்கள் வெளிவந்தன. **வள்ளுவரும் தாமஸும்** என்ற பெயரில் 'ஞானரதத்தில்' தொடராக வந்த நாவல் 1962-ல் எழுதப்பட்டது. இப் பொழுதுதான் நூல் உருவைப் பெறுகிறது. பல நாவல்கள் (12 நாவலாக இருக்க வேண்டும் என்பது என் கணிப்பு) இன்னமும் நூலாக வெளி வரவில்லை. ஒரு நாவலைப் போல் இன்னொன்று அமையக் கூடாது என்றும், சோதனை முயற்சியும் வித்தியாசமான உத்தி களையும், உருவமும் உள்ளடக்கமும் அமைய வேண்டுமென்றும், சொந்தமான ஒரு தனி தத்துவ தரிசனத்துடன் இவர் எழுதினார். மிகவும் மரபு வழியைச் சார்ந்த பாணியிலிருந்து மிக நவீன பாணிகள் வரையில் இந்த நாவல் களில் கையாண்டு பார்த்து நாவல் கலையின் எல்லைகளை விரிவாக்க வழி செய்திருக் கிறார். **பொய்த்தேவு** என்பதில் ஒருவனின் ஜீவியத்தை, எட்டி நின்று சொல்ல முயன் றிருக்கிறார். இதில் வரும் சோமு பண்டாரம் நம் சித்தர் மரபில் வந்தவனாகவே தோன்று கிறான். பல வகையில் சோமு பண்டாரம், பின்னர் உருவான "ஹென்றி" (ஒரு வீடு, ஒரு உலகம், ஒரு மனிதன்)க்கு வழிகாட்டி.

ஏழுபேரில் ஒரு சமுதாயப் பிரச்சனையை சம்பந்தப்பட்டவர்கள் எப்படி அணுக முயலு கிறார்கள் என்று சொல்லப் பார்த்திருக்கிறார். ஒருநாளில் கிராமத்துக்குப் புதிதாக வருகிற ஒரு வாலிபன் மனோபாவத்தை எப்படி கிராமத்துப் பாத்திரங்கள் பாதிக்கிறார்கள் என்று சொல்லுகிறார். உளவியல் ரீதியில் **அசுரகணத்தில்** ஒருவன் மனநோக்காக சம்பவங்கள் விவரிக்கப்படுகின்றன. **அவரவர் பாடு**" என்பது ஒரு "Psycho - Thriller" எழுத முயற்சி. ஒவ்வொரு நாவலைப் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க முடியும். ஆனால், அவை எல்லாமே பொருட் படுத்த வேண்டிய அளவிற்கு நல்ல நாவல்கள் என்பதுடன் இதனை முடித்துக் கொள்வோம்.

க. நா. சு. வின் மிகப் பெரிய செயலாக எனக்குப் படுவது அவருடைய மொழிபெயர்ப்பு கள் தான். ரொமன் ரோலந்தின் **ஜீன் கிருஸ்தஃபர்**, மார்டின் து. கார்டின் **தபால் காரன்**, லேகர் லெவினின் **மதகுரு**, நட் ஹம்சனின் **நிலவளம்**, லேகர் கொஸ்டின் **அன்புவழி**, ஜார்ஜ் ஆர்வெல்லின் **1984**, மற்றும் **விலங்குப் பண்ணை**, இப்ஸனின் **பொம்மையா மனைவியா** ஆகியவை முக்கிய மானவை. உலக இலக்கியத்தில் புதிய சிகரங் களைத் தொட்ட இந்த கலைப் படைப்புகளைத் தமிழ் வாசகருக்கு க. நா. சு. அறிமுகம் செய்து வைத்த காரணத்தினால் தான், இன்று நம் முடைய சூழலில் நவீன இலக்கியத்தைப் பற்றிப் பேச முடிகிறது. ஜேம்ஸ் ஜாய்ஸ், ஆந்த்ரே ழீட், பால்சாக், ஹெர்மன் ஹெஸ்ஸே, ஃப்ரூஸ்ட், தாமஸ் மன் ஆகியோர்களையும் அவர் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். குமுதமே ஒப்புக் கொண்டுள்ளது போல் அவர் செய்த மகத்தான தொண்டு மிகச் சிறந்த மேனாட்டு நாவல்களை (ஒவ்வொன்றும் ஏழு எட்டுப் பக்கத்துக்குள்) 'புகழ் பெற்ற நாவல்கள்' என்ற தலைப்பில் சுருக்கித் தந்தது. இதே அளவிற்கு முக்கியமான மற்றொரு விஷயம் "படித்து இருக்கிறீர்களா?" என்ற தொடர் கட்டுரை மூலம் (இப்பொழுது இரண்டு தொகுதி புத்தகமாக கிடைக்கிறது) உலகில் தலைசிறந்த நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், இந்தியாவில் முக்கிய நாவல்கள் மற்றும் இலக்கியப் படைப்புகளை அறிமுகப் படுத்தியது தான்.

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு திருக்குறள், சிலப்பதிகாரம், சில குறுந்தொகைப் பாடல்கள், பல சங்க இலக்கியத் தனிப்பாடல்கள், பாரதியா ரின் சில முக்கிய கவிதைகள், பாரதிதாசனின் சில பாடல்கள், புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா., ஜானகிராமன், சா. கந்தசாமி, வண்ண நிலவன், சண்முக சுந்தரம் போன்றோ ரின் சிறுகதைகளையும், நீல. பத்மநாபனின் "தலைமுறைகள்", சா. கந்தசாமியின் "சூரிய வம்சம்" உட்பட பல நவீன நாவல்களையும் மொழி பெயர்த்து இருக்கிறார். ஆங்கிலம் மட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

□

இந்த மனிதர்களை வெகுநாளாய்த் தெரியும் எனக்கு
வெளியில் அல்ல வேஷம் போடுவது இவர்கள்;
மாரடித்துக் கூழ் கொள்கிறார்கள்
இறைக்குப் படைத்து
இரவலர்க்கும் அளித்துவிட்டே
பசியாறுகிறார்கள்
இவர்களை எனக்கு வெகுநாளாய்த் தெரியும்
உள்ளுக்குள்ளேயே சமன்செய்து கொண்டவர்கள்.

□

மையமற்ற இடத்தில் என் வாசம்
பொருளாதாரத்தில் வராதது என் உணவு
என் உறவுக்கோ நிபந்தனைகள் ஒன்றுமில்லை
நேசம் ஒன்று பொங்குகிறது
என்னை என்னை அழித்து.

□

கதாநாயகன்
மாண்டு போனான்
வில்லன் என்றுவர
இனி யாருமில்லை,
நாயகியைத் தேடும்
வேதனைகள் இல்லை.
காமெடிக்கோ
தேவையே இல்லை.
இப்போது
நீ வந்து கேட்டால்
எனக்குக் கதைதான் ஏது ?

பிரதீபன்

## விளைநிலம்

ஒரு சிறு கனவுக்காகவேனும்
இனிய மகரந்தப் பொடிகளோ, பூக்களோ அற்று
எம் தேச வெளியெங்கும்
குருதிப் படலம் மூடியுள்ளதாய் உணர்கிறேன்.

மனதையே கீலமாய்க் கீறவும்
எம்மிடை ஆட்கள் இருந்தனர்.
கொடிய சோகம் நெஞ்சைப் பிழியவும்
வார்த்தைகளற்று வெறுமனே இருந்தோம்.

போயிற்று
எமதினிய உயிர்கள்
கண்களிலிருந்து குருதியே பெருகவும்
காட்சிகள் உருக்குலைந்தே போயின.

எனினும் என்ன
இன்னும் எனதூரில்
பின்னேரமானால் மாடு சாய்த்தபடி
வீடு செல்கிற மனிதரைக் காண்கிறேன்.

திரைகளை நெரித்து
வலைகளைப் படுத்திக்
காத்திருக்கின்றார் கடல்மடியில்.

காய்ச்சிய இரும்பெல்லாம்
எங்களூர்க் கம்மாலையில்
பொறி தெறிக்கிறது.

காலத்தையும் கடந்து
பொறிகள் தெறிக்கும்
பெருந்தீ மூளுதற்காய்.

- இளவாலை விஜயேந்திரன்

மல்லாமல் பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன் ஆகிய மொழிகளில் க.நா.சு. அசாத்தியப் புலமை பெற்று இருந்தார்.

ஆனால் இது எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது க.நா.சு. என்ற தனிநபரின் நேர்மை தான். தனக்குத் தெரியாததைத் தெரியாது என்று சொல்லக்கூடிய மன வலிமை அவருக்கு இருந்தது. "படிகள்" பத்திரிக்கையில் மூன்று இதழ்கள் தொடர்ந்து வெளியான அவருடைய நீண்ட பேட்டி இதனை நன்றாக வெளிப்படுத்துகிறது. "GUNTER GRASS" சென்னை வந்தபோது, அவருடன் ஒரு சந்திப்பை மாக்ஸ் முல்லர் பவன் ஏற்பாடு செய்து இருந்தது. அந்த மேடையிலேயே க.நா.சு. "Tin Drum", "She Rat" போன்ற நாவல்கள் தனக்குப் புரியவில்லை என்று கூறினார். அதே போல், "கைலாசபதியின் புத்தகத்திற்கு நீங்கள் மறுப்பு எழுத வேண்டும்" என்று கூறியபோது, க.நா.சு. அளித்த பதில் : "என்னுடைய கொள்கை, விமர்சனத்திற்கு விமர்சனம் எழுதுவது தேவையில்லை என்பது."

இன்று பலர் க.நா.சு.விற்கு அரசியல் பிரக்ஞை கிடையாது; சமூகப்பார்வை கிடையாது என்று கூறி வருகிறார்கள். இந்தியாவில் அவசர நிலை கொண்டு வரப்பட்ட போது, அதை எதிர்த்து கையெழுத்து போட்ட முதல் இலக்கியவாதி க.நா.சு. தான். அவசர நிலை அமலில் இருந்த வரையில் லோக்தள தலைவர் சரண்சிங்கிற்காக ஒரு பத்திரிக்கையையும் அவர் நடத்தினார். ஆனால் இன்று ஏதோ புரட்சிப் பிழம்பாக குதிக்கும் "முற்போக்குகள்" அன்று என்ன செய்தனர் என்ற உண்மையும் நமக்குத் தெரியும். க.நா.சு.வின் அரசியல் பார்வை தத்துவ ரீதியாக பூரணமாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களைப் பற்றி அவர் அக்கறை கொள்ளவில்லை என்று கூறுவதில் உண்மை சிறிதும் இல்லை.

கடைசியாக, நான் இலங்கை சென்று வந்த பிறகு அவரை சந்தித்தேன். அப்பொழுதும் அவர் நம்பிக்கை குன்றாமல், வரும் ஜனவரி முதல் தேதி அன்று ஒரு கூட்டத்தை நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தான் கூறினார். கடைசி நிமிடம் வரையில் எழுத்தைப் பற்றியும், இலக்கியத்தைப் பற்றியும் மட்டுமே நினைத்துச் செயல்பட்டவர் அவர்தான். டெல்லியில், அவர் இறக்கும் வரை ஒவ்வொரு நாளும் சாகித்திய அகடமிக்காக ஒரு மொழி பெயர்ப்பு வேலையில்தான் மூழ்கி இருந்து இருக்கிறார். இப்பொழுது சொல்லுங்கள்: இறந்தது க.நா.சு. என்ற 77 வயது முதியவரா? □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்த்திரைவானில் ஈழத்தாக்கம்

சிங்கள இனவாத அரசிற்கு எதிராக தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும், இறைமையையும் மீளப் பெறுவதை இலக்காகக் கொண்டதே ஈழ விடுதலைப் போராட்டம். இப்போராட்டத்தின் விரிவாக்கமானது அல்லது போராட்ட வளர்ச்சியானது மொழியாலும், கலாச்சாரத்தாலும் ஒத்த குணங்களைக் கொண்டிருக்கும் தென்னிந்திய மக்கள் மத்தியில் பெருந்தாக்கத்தையேற்படுத்தியதுடன் எமது விடுதலையமைப்புகளை பாதுகாத்துப் பலப்படுத்தியதுடன் ஒரு பின் தளமாகவும் இருந்து வந்துள்ளது. எமது விடுதலையமைப்புகளும கூட பலவீனம் காரணமாகவோ அல்லது மேலதிக பாதுகாப்புக் காரணமாகவோ தென்னிந்தியாவை எமது போராட்டத்தின் பின் தளமாகக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டதனைத் தொடர்ந்து ஈழ விடுதலைப் போராட்டமானது தென்னிந்தியாவின் அரசியல், பொருளாதார, கலை போன்ற துறைகளில் கோணத்தில் வேறுபட்ட அதிர்வுகளை ஏற்படுத்தியது.

இவ்வகையில் இந்திய, தமிழ்த்திரைப் படங்களில், ஈழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய தாக்கம் என்பது எதிர் விளைவுத் தாக்கம் கொண்டதாகவே காணப்படுகின்றது. இத்தகைய நிலைக்கு தமிழ்த் திரைப் படங்களுக்கேயுரிய குணாம்சங்களும் காரணமாக அமையலாம். இந்தியத் தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்த வரையில் அவை முதலாளித்துவ நலன்களைப் பேணுவதோடு முற்று முழுதாக வர்த்தக ரீதியிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. பணம் பண்ணுவதையே முழு நோக்காகக் கொண்டவைதான் தமிழ்த் திரைப்படங்கள். வர்த்தக ரீதியில் தயாரிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களில் சமூக மாற்றக் கருத்துக்களை யதார்த்தமான முறையில் எதிர்பார்ப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஈழ விடுதலைப் போராட்டமானது முதலாளித்துவத்திற்கு எதிராகவும், அடிப்படையான ஒரு சமூக மாற்றத்தை முன்னிலைப் படுத்துவதாலும் அதனை யதார்த்தமான முறையில் வெளிப்படுத்தக்கூடிய வகையில் அல்லது ஈழ விடுதலைப் போராட்டத்தின் இலக்கினை முழுமைப்படுத்தக்கூடிய நிலையில் இந்தியத் திரைப்படங்கள் கனதியான முறையில் ஆரோக்கியமாக வளரவில்லை. இதன் காரணத்தால் இதுவரையில் வெளிவந்த இந்திய தமிழ்த் திரைப்படங்கள் யாவுமே ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆரோக்கியமான முறையில் நெறிப்படுத்தத் தவறிவிட்டன.

தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் தமிழ்த் திரைப்படங்களின் செல்வாக்கு சகல துறைகளிலும் பலம் வாய்ந்த ஒன்றாகும். இப்பலத்தை பயன்படுத்தி ஈழ விடுதலைப் போராட்ட நிகழ்வின் தியாகங்களையும் அவசியத்தையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம் மக்களையும் போராளிகளையும் ஓர் புரிந்துணர்வின்கீழ் இணைப்பதுடன் போராட்டத்தையும் நெறிப் படுத்தக்கூடிய ஒரு சாதனமாகத் தமிழ்த் திரைப்படங்களைப் பயன்படுத்தலாம். இந்நிலைக்கு மாறாக ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி கையாளப்பட்ட ஒவ்வொரு திரைப்படங்களிலும் ஈழ விடுதலைப் போராட்டத்தை, அப்படத்தின் ஒரு காட்சியமைப்புக் கருதியோ, அல்லது அரசியல் நகைச்சுவை கருதியோதான் கையாண்டிருக்கிறார்களேயன்றி ஈழ விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்திற்கு எந்த முன்னிலையும் கொடுக்கவில்லை. இவையும் நில்லாத நிலையில் ஈழ விடுதலைப் போராட்டத்தை எந்தக் கோணத்தில படம் பிடித்தால் பணம் சம்பாதிக்கலாம் என்ற நிலையிலேயே ஈழ விடுதலைப் போராட்டத்தின் "தாக்கம்" தமிழ்த் திரைப் படங்களில் இருந்து வருகின்றது. 1982 — 1988 இற்கு இடைப்பட்ட 6 வருட காலப் பகுதியில் சுமார் 800 திரைப்படங்கள் வெளிவந்திருந்த போதிலும்கூட தமிழ்த் திரைப் படங்களின் — சுயநிர்ணய உரிமையை முன் வைத்து நடாத்தப்படுகின்ற ஈழ விடுதலைப் போராட்டத்தை மையகருவாகக் கொண்டு இலட்சிய நோக்கத்தோடு — எந்தத் தமிழ்த் திரைப்படங்களும் இதுவரை வெளிவராத நிலையே ஈழ விடுதலைப் போராட்டத்தின் தமிழ்த் திரைப்படங்கள்குறித்த "தாக்கம்" எனக் கொள்ளலாம்.

இந்திய சுதந்திரப் புரட்சியை வெளிப் படுத்துகின்ற "காந்தி" படம் உருவாக்கப் பட்டபோது, அதன் தயாரிப்பாளரும் இயக்குநருமான "அட்டன்பெரோ" அப்படத்தை இயக்குவதற்கு முன்பாக 8 வருடங்களாக அப்படத்தைப் பற்றிய திட்டங்களை மேற் கொண்டும் 1 வருடகாலம் இந்தியாவில் தங்கியிருந்தும், 6 தடவைகள் இந்தியாவிற்கு வருகைதந்த பின்பாகவுமே அப்படத்தை உருவாக்கினாராம். அதனால்தான் "காந்தியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சியைப்" அதன் புனிதம் கெடாத வகையில் அதன் உண்மைத் தன்மையோடு உருவாக்க முடிந்தது.

இத்தகைய ஒரு யதார்த்தமான உணர்வினை அதன் உண்மை நிலை கெடாத வகையில் ஈழப் போராட்டம் குறித்து தமிழ்த் திரைப்பட இயக்குநர்களோ தயாரிப்பாளர்களோ மக்கள் மனதில் ஏற்படுத்தத் தவறிவிட்டனர். தமிழ்த் திரைப்படங்களில் அதிக பட்ச யதார்த்தத்தினை கையாளுபவர் எனக் கருதப்படும் கே. பாலசந்தர்கூட தமது புன்னகை மன்னன் திரைப்படத்தில் எமது போராட்டத்தினை தவறாகவே கையாண்டிருக்கிறார். புன்னகை மன்னன் 'காதலை' கருவாகக் கொண்டதேயன்றி ஒரு சமூக பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட படமல்ல. காதலை நயம்படுத்த, நாணயமற்ற முறையில் எமது ஈழ விடுதலைப் போராட்டத்தை பல இடங்களில் கொச்சைப்படுத்தியுள்ளனர். படத்தின் இறுதிக்கட்டத்திலும்கூட சுபமாக முடிய வேண்டிய கதை ஈழப்போராளிகளின் குண்டு வைப்புகளினால் குழப்பப்படுத்துவதாக முடித்துள்ளனர். எமது போராட்டத்தின் வடிவமும், வரையறையும் வேறு. அவர் கையாண்டுள்ள அல்லது அர்த்தப் படுத்தியுள்ள முறைமை வேறு. நியாயமான எமது போராட்டமானது பாலசந்தரின் கதாபாத்திர அமைப்புகளினால் வேறு ஒரு வடிவத்தினைப் பெற்றிருந்தது. இருப்பினும் அப்படத்தில் கையாளப் பட்டுள்ள சில வசனங்கள் குறிப்பாக "இந்நாட்டில் உங்கள் இரத்தத்தை சிந்தாமல், உங்கள் நாட்டில் சிந்துங்கள். அங்குதான் ஆயிரமாயிரம் மக்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள்." "அனுதாபம் என்பது எமக்குள் இருந்து வர வேண்டுமேயன்றி நீங்களாகச் சொல்லி வரக் கூடிய ஒன்றல்ல" போன்ற வசனங்கள் அப்போதைய சூழ்நிலைக்கு ஒத்துப்போகக் கூடியதாகவிருந்தாலும் ஒட்டுமொத்தத்தில் எமது போராட்டத்தை கையாண்ட முறையில் உடன்படக்கூடிய நிலைப்பாடு எதுவுமில்லை.

அவ்வாறே 'மந்திரப் புன்னகை" படத்திலுங்கூட வில்லனாகச் சித்தரிக்கப்படும் ரகுவரனின் (டானியல் மிராண்டா) நடை, உடை, ஆயுதக் கையாளல், கதாபாத்திரம் வாழ்கின்ற சூழ்நிலை அனைத்துமே ஈழப் போராளிகளை ஞாபகப்படுத்துவதாகவே இருந்தது. இங்கும் ஈழ விடுதலைப் போராட்டத்தின் உண்மைநிலை ஊமைநிலையாக்கப் பட்டதுடன், பிழையான ஒரு வெளிப்பாடே ஆயுத வடிவில் மக்களுக்கு உணர்த்தப்பட்டது.

இவ்வாறு ஒரு மந்திரப் புன்னகையில் மட்டுமல்ல, தொடர்ந்து வந்த எல்லா மந்திரப் புன்னகைகளுமே ஈழ விடுதலைப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டே வந்துள்ளது. ஏலவே குறிப்பிட்டதைப்போல இந்தியத் தமிழ்த் திரைப் படங்களில் ஈழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய "தாக்கம்" என்பது கையாளப் பட்ட திரைப்படங்களில், ஒரு காட்சியமைப்பை பணமாக்குவதற்கோ, அல்லது நகைச்சுவைக்கு மெருகு கொடுப்பதற்காகவோ என்ற நிலையில் தான் இருந்துவருகின்றது. வேறு வகையில் கூறுவதாயின் எமது விடுதலைப் போராட்டத்தின் யதார்த்த நிலையானது இந்தியத் தமிழ்த் திரைப்படங்களினால் சிதைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் விற்கப்பட்டும் வருகின்றது.

— டங்கல்

நன்றி : நார்வே நாட்டு 'சுவடு' இதழ்.

## நிஜங்கள்

தாய்ப்பசுவின்
குரலுக்காய்
ஏங்கித் தவிக்கும் கன்றுபோல்
அவன் பாடலுக்காய்
என் மனமும்
ஏங்கித் தவித்தது.

இரவின் சொப்பனங்கள் கூட
அவனையே வலம் வந்தன
இருந்தாலும் கூட
யதார்த்தங்கள் உணர்த்தின
அவை
வெறும் பகற்கனவுதானென்று

உணர்வுகளை சுண்டி இழுப்பதும்
உணர்ச்சிகளை வரவழைப்பதும்
அவர்களது பொழுதுபோக்கு
உறவின் நெருக்கத்தை வளர்க்க
இது
உகந்த நேரமும் அல்ல

கனவின் மாயைகள்
கண்ணிற்கு குளிர்ச்சியாய்
நிஜத்தின் புரிவுகள்
நிதமும் வெப்பமாய்

யாரையும் நம்புவதற்கில்லை
ஆம்
யாரையும் நம்புவதற்கில்லை.

—மணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

21

நட்புறவுப் பாலம் □ மார்ச் 1989 □ பதிவெண் : டி.என்.எம்.எஸ்.(எஸ்) 371

தமிழுக்குப்
புதியக் காற்றைக்
கொணரும்

# சாளரம்

□

முதல் வெளியீடு

சுந்தரையா
எழுதிய

# வீரத் தெலங்கானா

## ஆயுதப் போராட்டமும் அதன் படிப்பினைகளும்

□

தமிழ்ப் பதிப்பாசிரியர் : தியாகு

ஏப்ரலில் நூல் வெளிவருகிறது

□

விபரங்களுக்கு
சாளரம், 12, முதல் பிரதான சாலை, நேருநகர், அடையாறு, சென்னை-20.

□

வெளியிடுபவர் : இரா. திரவியம், 12, முதல் பிரதான சாலை, நேருநகர்,
சென்னை - 20. அச்சிடுபவர் : ஜே. ரமணி, ப்ளேஸ் பிரிண்டர்ஸ்,
அடையாறு, சென்னை - 20. ஆசிரியர் : நதி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்